சகானரா நகைமாடம்
For Genuine 22ct Gold Jewellery
முல்லை வீதி
தண்ணீரூற்று.
Tel:0772178666

நடுநிலை இதழ்
# தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்
22கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்
புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -158



## வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளின் 110 தளபதிகளும் எங்கே?



## வடமாகாண சபையின் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமா?

## ஒற்றையாட்சியின் கீழ் சமஸ்டித் தீர்வு என்பது வேடிக்கைக்குரியது

வன்னி குறோஸ் கலாச்சார பேரவை பெருமையுடன் நடாத்தும்
மாபெரும் முத்தமிழ் விழா – 2016
காலம் – 28.05.2016 (சனிக்கிழமை)
நேரம் – மாலை 2.30 மணி
இடம் – புதுக்குடியிருப்பு நகரம்
பிரதம விருந்தினர்கள்
தலைமை: வைத்திய கலாநிதி கௌரவ. சி. சிவமோகன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இணைத்தலைவர் முல்லை மாவட்ட இணைப்புக்குழு
திரு. நாசர் – பிரபல திரைப்பட நடிகர், தென் இந்திய நடிகர் சங்கத் தலைவர், நாட்டுக்கூத்து கலைஞர்
திரு. சண்முகராசா – தென் இந்திய குணச்சித்திர நடிகர், நிகழ்நாடக மன்ற கூத்துப்பட்டறை நிறுவுனர்
கௌரவ இரா. சம்பந்தன் – பாராளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், தலைவர் – தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
கௌரவ சோ. மாவை சேனாதிராஜா – பாராளுமன்ற உறுப்பினர், தலைவர் –இலங்கைத் தமிழரசுக்கட்சி
திரு.எஸ். இராமசுப்பிரமணியன் – தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகாஷ் குறூப்
ஊடக அனுசரணை:- THINAPPUYAL THE HEART BEAT OF THE NATION | தினப்புயல்

# வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளின் 110 தளபதிகளும் எங்கே?

வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளின் விபரத்தை இராணுவத்திடம் சரணடையச் செல்ல முன்னரே புலிகளால் எரிக்சொல்ஹெய்ம் அவர்களுக்கு அனுப்பப் பட்டதாகவும். தற்போது இந்த விபரத்தை ஐ.நா வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. வெளியிடப்பட்ட 110 நபர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:-



வெ.இளங்குமரன், க.வே.பாலகுமாரன், யோ.யோகி, சி.கரிகாலன்

பரா, கி.பாப்பா, இளம்பரிதி, புதுவை இரத்தினதுரை

எழிலன், சஞ்சை, சோ.தங்கன், வீமன்

லோரன்ஸ், ரேகா, வேலவன், நீதன்

01. ஆதவா (செயற்பாடு தெரியாது)
02. அகிலன் மாஸ்டர் (புலனாய்வுப் பிரிவு).
03. அம்பி (செயற்பாடு தெரியாது)
04. அராமுதன் (இம்ரான் பாண்டியன் படை அணியின் பிரதி தளபதி).
05. ஆர்யன் ( செயற்பாடு தெரியாது)
06. பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன்) ( கல்வித்துறைப் பொறுப்பாளர்).
07. பாலச்சந்திரன் பிரபாகரன் (பிரபாகரனின் இளைய மகன்).
08. ஏ.பாலகுமாரன் (மூத்த உறுப்பினர்)
09.Lt.Col.அருன்நம்பி (இம்ரான் பாண்டியன் படை அணியின் தளபதி)
10.பாலகுமாரின் மகன் தீபன் (சூரியதீபன்)
11. பாலதாஸ் ( சிரேஷ்ட உறுப்பினர். நிதித் துறை)
12. பாரி (வெளியக கணக்காய்வு பொறுப்பாளர்)
13. பாபு (நகை விற்பனை பொறுப்பாளர். மனைவியுடன் சரணடைந்ததாக சொல்லப்படுகிறது).
14. பாபு - இளம்பரிதி (சேரன் வாணிப பொறுப்பாளர்)
15. பவன் கமில்டன் (கடாபியுடன் இருந்தவர். ஆனால் அங்கவீனமானவர்களை பராமரித்தவர்)
16. பாஸ்கரன் (மணலாறு தலைமையக பொறுப்பாளர்)
17. பாஸ்கரன் (சொர்ணத்துடன் பனியாற்றியவர். கிளிநொச்சியில் பிறந்தவர்)
18.Lt.Col.சந்திரன் (இராணுவ புலனாய்வு)
19. எழிலன் (திருகோணமலை அரசியல் பொறுப்பாளர்)
20. எழில்வாணன் மாஸ்ரர் (பாடசாலை ஆசிரியர்)
21. வன.பிதா.பிரான்சிஸ் ஜோசப் (கத்தோலிக்க பாதிரியார்)
22. கோபி அக்கா (வீரபாண்டியன்) (ஒரு கையை இழந்தவர். சொத்து மேற்பார்வை)
23. கரிகரன் ( செயற்பாடு தெரியாது)
24. இளம்திரையன் (மார்ஷல்) (இராணுவ பேச்சாளர்)
25. இளம்பரிதி (சின்னத்தம்பி மகாலிங்கம்) (யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர்)
26. இளம்பரிதி (மகாலிங்கம் சிவாஜினி) ( இளம்பரிதியின் மனைவி)
27. இளம்பரிதி மகாலிங்கம் மகிழினி (10 வயது)
28. இளம்பரிதி மகாலிங்கம் தமிழொளி (8 வயது)
29. இளம்பரிதி மகாலிங்கம் எழிலினி (3 வயது)
30. இளம்குமரன் (மணலாறு. கட்டளை அதிகாரி)
31. இளவேங்கை மாஸ்டர் (செயற்பாடு தெரியாது)
32. இன்தமிழ் (செயற்பாடு தெரியாது)
33. இரும்பொறை மாஸ்டர் (சினைப்பர் அணி பொறுப்பாளர்)
34. இசைப்பிரியா (ஊடகப்பிரிவு)
35. ஜவான் (புலிகளின் குரல் வானொலி)
36. ஜெயராஜ் (நிதிப் பிரிவு)
37. காந்தி (புலனாய்வு பிரிவு. சிறைப் பொறுப்பாளர்)
38. கண்ணன் (அரசியல் பிரிவு. மாணவர் அமைப்பு பொறுப்பாளர்)
39. கங்கன்/கனகன் (லோகநாதன் அருணாசலம்) (அரசியல் பிரிவு. பாதுகாப்பு)
40. கரிகாலன் (முன்னாள் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர்)
41. கருவண்ணன் (மாவீரர் பணிமனை வாகன பொறுப்பாளர்)
42. கினி (யோகியின் உதவியாளர். முரண்பாட்டு ஆய்வு நிறுவன பிரதிப் பொறுப்பாளர்)
43. கிருபா மாஸ்டர் (செயற்பாடு தெரியாது)
44. குயிலன் ( இராணுவ புலனாய்வு)
45. குமரன் (பால்ராஜின் மைத்துனர்)
46. குணம் (சிரேஷ்ட படைத் தளபதி. அனேகமாக திருகோணமலையின் முன்னாள் தளபதி)
47. குட்டி (பாண்டியன் வாணிப பொறுப்பாளர்)
48. லோரன்ஸ் (வவுனியா மாவட்ட கட்டளை அதிகாரி)
49. மாதவன் (காவல்துறை பிரதி பொறுப்பாளர்)
50. மஜீத் (இராணுவ புலனாய்வு-நிர்வாக அதிகாரி)
51. மலரவன் (நிர்வாக சேவை)
52. மனோஜ் (ஏற்பாடுகள் - ரூபனின் பிரதி)
53. மணியரசன் (சிரேஷ்ட இராணுவ தளபதி)
54. மாது (திருகோணமலை இராணுவ பிரிவு)
56. மிரேஷ் (நிதர்சனம் தொலைக்காட்சி)
57. மோகன் அங்கிள் (கடற்புலிகள்)
58. முகிலன் (இராணுவ புலனாய்வு)
59. முகுந்தன் (வடபோர் முனையில் தீபனின் பிரதி)

Balakumaran-custody இறுதி

60. நடேசன் (அரசியல் துறைப் பொறுப்பாளர்)
61. நாகேஷ் ( ஒரு கால் இல்லை. நிர்வாக பிரிவு பொறுப்பாளர்)
62. நளாயினி (பொறுப்பாளர். ஆங்கில கல்லூரி)



63. நளாயினி.'.நளாகினி (மாலதி படைப்பிரிவு)
64. நேயன் (புலனாய்வு)
65. நீதன் (தலைமையக பொறுப்பாளர். சொந்த இடம் திருகோணமலை)
66. நிலவழகி (மருத்துவ பிரிவு மருத்துவர். இரு குழந்தைகளின் தாய்.
67. நிஷாந்தன் (கடாபியுடன் இருந்தவர். பின்னர் அங்கவீனமானவர்களை பராமரித்தார்)
68. நிஷாந்தன் மாஸ்டர் (இராணுவ விநியோகம்)
69.பஞ்சன்புலனாய்வு(மகாதேவன்ஞானகரன்) (முக்கியஸ்தர்களில் ஒருவர்)
70. பரா ராதா (நீதித்துறை பொறுப்பாளர்)
71. Dr.பத்மலோஜானி (கரிகாலனின் மனைவி. மருத்துவ பிரிவு)
72. Lt.Col.பிரபா (புலனாய்வு பிரிவு)
73. பூவண்ணன் (நிர்வாக பிரிவு பொறுப்பு)
74. பூவண்ணன் மாஸ்டர் (செயற்பாடு தெரியாது)
75. பிரியன் (சுவாமிநாதர் தயாசிறி) (நிர்வாகத்துறை பிரதி)
76. புலித்தேவன் (சமாதான செயலகம்)
77. புலிமைந்தன் (யோகியின் சாரதி)
78. புரச்சிகா (அம்பியுடன் கூட இருந்தவர்)
79. புரட்சி மாஸ்டர் (ஆர்.பி.ஜி சினைப்பர் பிரிவு)
80. ரூபன் ( ஏற்பாடுகள் பொறுப்பாளர்)
81. ராகுலன் (யாழ்ப்பாண படைப்பிரிவு பிரதி)
82. ராஜா (விளையாட்டுத்துறை. பாப்பாவின் பிரதி. 4 பிள்ளைகளுடன் காணவில்லை)
83. புதுவை இரத்தினதுரை (கவிஞர். கலை மற்றும் கலாசார பொறுப்பாளர்)
84. Col.ரமேஸ் (இளங்கோ) (காவல் துறை)
85. Col.ரமேஸ்(சிரேஷ்ட இராணுவ தளபதி)
86. ரேகா மகேந்திரராஜா (மருத்துவ பிரிவு பொறுப்பாளர்)
87. ரஜித்தன் (மணலாறு மாவட்டம்)
88. ரூபன் (யாழ்ப்பாண படைப்பிரிவு 3 ஆவது பொறுப்பாளர்)
89. S.தங்கன் (சுதா ) சோமசுந்தரம் சுதா
90. கரன் (அரசியல் துறை பிரதி)
91.சக்தி (வனப்பிரிவு ஒருங்கினைப்பாளர்)
92. சத்யன் ( வளப் பா்துகாப்பாளர்)
93. செல்வராசா (யாழ் மாவட்ட தளபதி)
94. சிலம்பன் (ராதா விமான எதிர்ப்பு பொறுப்பாளர்)
95. சின்னவன் (புலனாய்வு)
96. சித்திரங்கன் (மணலாறு மாவட்டத்துக்கான தளபதி)
97. Lt.Col.சுடரவன் (இராணுவ புலனாய்வு)
98. Lt.Col.தணிகையரசு (இம்ரான் பாண்டியன் படைப் பிரிவு)
99. திலக் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயலக பொறுப்பாளர்)
100. திலகர் (நிதிப் பிரிவு. விவசாயம். பண்ணைகளை கவனித்து வந்தார்)
101. துவாரகன் வயிரவமூர்த்தி (மாவீரர் துயிலும் இல்லம் மன்னார்)
102. வாகிசன் (ராமநாதன் நிமலநாதன்) (செயற்பாடு தெரியாது)
103. வீரதேவன் (மகாலிங்கம் ஜெயகாந்தன்) (வங்கிகள் பொறுப்பாளர்)
104. Lt.Col.வைதி (இராணுவ புலனாய்வு)
105. Lt.Col.வள்ளுவன் மாஸ்டர் (ராதா விமான எதிர்ப்பு பிரிவு)
106. வேலவன் (சிரேஷ்ட தளபதி. இம்ரான் பாண்டியன் படை அணி)
107. வேல்மாறன் (கேணல் பிரபாவின் பாதுகாப்பாளர்)
108. வினிதா (நடேசனின் மனைவி )
109. வீமன் (கட்டளை தளபதி)
110. விபுலேந்திரன் (நிதிப் பிரிவு)
111. யோகன் / சேமணன் (அரசியல் துறை)
112. யோகி (முரண்பாட்டு ஆய்வு நிறுவன பொறுப்பாளர்) போன்றவர்களின் பெயர்களே அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## த.தே.கூட்டமைப்பின் அடுத்தகட்ட நிலைப்பாடு என்ன?

எதிர்க்கட்சிப்பதவி ஆசனத்தில் த.தே.கூட்டமைப்பு அமர்ந்த பின்னர் அவர்களது செயற்பாடுகள் அனைத்தும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே அமைந்திருப்பது கவலையளிக்கிறது. அதே நேரம் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாடுகளோடு செயற்பட்டுவந்த த.தே.கூட்டமைப்பு இன்று சமஸ்டி ஆட்சி குறித்து அரசிடம் கோரினாலும் அதனை அவர்கள் பெற்றுத்தரும் நிலைப்பாட்டில் இல்லை. ஆகவே அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும். தமிழ் மக்களுக்கு ஆதரவாக அரசியல்யாப்பு மாற்றப்படுமா என்பது கேள்விக்குறியவிடயம்.

தற்போது ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களுக்கான சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனினும் மாகாணசபைக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இதனை மத்திய அரசு தன்னிடம் வைத்துள்ளது. இந்தியாவின் மாநில சுயாட்சியினைப்போல இலங்கையிலும் மாநில சுயாட்சி நடாத்தப்படவேண்டும் என இரா.சம்பந்தன் அவர்கள் த.தே.கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரத்தில் வவுனியாவில் வைத்து தெரிவித்திருந்தார். இதில் பல்வேறு விடயங்கள் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உட்பட்டதாகவே அமைந்திருந்தது. வீரவசனங்களைப் பேசிய த.தே.கூட்டமைப்பின் தலைவர்கள் இன்று அரசின் அடிவருடிகளாக செயற்படுவதென்பது த.தே.கூட்டமைப்பின் முன்னைய அரசியலை விட தற்போதைய அரசியல் பின்னோக்கிப் பயணித்துள்ளது என்பதையே வெளிப் படுத்துகிறது.

த.தே.கூட்டமைப்பு 17 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தம்வசம் கொண்டிருந்தும் உறுதியான முடிவுகளை மேற்கொள்ள முடியாமலுள்ளநிலை தமிழ் மக்களுக்குக் கிடைத்த சாபக்கேடாகவே கருதமுடிகிறது. பதவிகளுக்காக ஆசைப்பட்டு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை விற்கும் ஒரு செயல்வடிவமாகவே த.தே.கூட்டமைப்பின் நகர்வுகள் மாற்றம்பெற்றுள்ளது. கடந்தகால அரசியல் வரலாறுகளில் அரசுடன் ஒத்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ் அரசியல்வாதிகளது நிலைமை கவலைக்கிடமாக மாறியுள்ளது. பிரபா கரனால் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு முந்தைய தலைவர்கள் அரசினால் சிறைவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். அதன் பின் தமிழீழக் கோட்பாடானது திம்புவில் வைக்கப்பட்டிருந்தது. இதில் அப்போதிருந்த அனைத்துஆயுதக்கட்சிகளின்தலைவர்களும் பங்கேற்றனர். இவர்களது குறிக்கோள் தமிழ் மக்களுக்கான தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுப்பதேயாகும். இதற்கிடையில் விடுதலை இயக்கங்கள் தமக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்ததன் காரணமாகவே சகோதரப் படுகொலைகள் இடம்பெற்றது. பின்னர் விடுதலைப்புலிகள் பரிணாம வளர்ச்சிபெற்று தரை, வான், கடல் என தேசிய இயக்கமாக வலுப்பெற்று பின்னர் சர்வதேச நாடுகளின் உதவியுடன் விடுதலைப்புலிகளது ஆயுதப்போராட்டம் முடக்கப்பட்டது.

த.தே.கூட்டமைப்பானது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டது. அப்போதைய தேர்தலில் 22 ஆசனங்களை த.தே.கூட்டமைப்பு கைப்பற்றியது. இன்று அது பாரியளவில் வீழ்ச்சியடைந்திருக்கிறது. தொடர்ந்தும் இவர்கள் அரசுடன் இணைந்து செயற்படுவார்களெனில் எதிர்வரும் தேர்தல்களில் குறைந்தளவு ஆசனங்களைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை இவர்களது தற்போதைய அரசியல் எடுத்துக்காட்டுகிறது. சம்பந்தன் அவர்களின் ஓய்வின் பின்னர் கட்சியை வழிநடாத்திச்செல்ல சுமந்திரன்(குட்டிக்கதிர்காமர்) அவர்களே தெரிவு செய்யப்படுவார். இவ்வாறான நிலையில் த.தே.கூட்டமைப்பினது செயற்பாடுகள் அரசியல் நடவடிக்கைகளில் எவ்வாறான மாற்றத்தை தமிழ் மக்களுக்காகக் கொண்டுவரும் என்பதோடு தமிழ் மக்களாகிய நாம் இனிவரும் நாட்களில் சிந்தித்துச்செயற்படவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதுவே உண்மை.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

82

தரித்து நின்ற ஊர்திகளும் வேகமாகப் புறப்படத் தொடங்கின. இப்படித் தேவைப்படும் நேரத்தில் மட்டும் எறிகணைகளை வீசிவிட்டு அடுத்த கட்டத்துக்காகக் காத்திருந்தது எறிகணை ஏவும் அணி. அந்தநேரம் தான் எதிர்பாராதவிதமாகச் சாவைத் தூக்கிவந்த எறிகணை ஒன்றால் காவுகொள்ளப்பட, மேஜர் தேனரசி செம்மணிச் சந்தியில் விழிகளை மூடினார்.

இப்போது நெடுஞ்சாலையில் நிதியின் செக்சனுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான தூரம் 100மீ அளிவிலிருந்தது. அன்று மாலை திடீரென முன்னேறித் தமக்கு முன்னேயிருந்த வெற்றுக் காவலரணுள் நுழைந்துகொண்டனர் படையினர். இடையிலிருந்த ஒரு காப்பரண் மற்றையதை மறைத்துக்கொண்டிருந்தமையால்அதனைச் சரியாக அவதானிக்க முடியவில்லை. இடைவெளித்தூரம் 75மீ ஆகியது. மறுநாள் அதிலிருந்த படையினரைத் துரத்தும்வரை தலை நிமிர முடியாத அடியாகத்தான் இருந்தது.



அரியாலைப் பகுதியில் படையினரின் முன்னரங்கின் உட்பகுதியானது முக்கிய பகுதிகளை உள்ளடக்கி தளம் ஒன்றின் வடிவில் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது. இதனால் ஒவ்வொரு தளங்களையும் தாக்கி அழிப்பதன் மூலம் கூடியளவு நிலத்தை விடுவிக்க முடியும். எனவே இருள் கவிந்ததும் நெடுஞ்சாலையை அண்டியதாக கப்டன் கலைக்குயிலுடன் சாந்தியின் செக்சனும், மணியந்தோட்டப் பகுதியால் கீர்த்தியின் பிளாட்டூனும் நகர்த்தப்பட்டன. அத்துடன் வேறு அணிகளும் அதில் கலந்துகொண்டன.

வீதியை அண்டி கலைக்குயிலுடன் நகர்ந்த அணி கட்டிடப்பகுதியிலிருந்து பலத்த எதிர்ப்பைச் சந்தித்த படிதான் போய்க்கொண்டிருந்தது. கட்டிடங்களின் ஒவ்வொரு துவாரங்களிலிருந்தும் சீறுகின்ற துப்பாக்கிகளின் செயற்பாட்டை நிறுத்தவேண்டுமானால் மிக வேகமாக நகர்ந்து அவற்றை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் முயற்சி எடுத்துக்கொண்டோம். ஒவ்வொரு போராளி களினதும் தனித்த செயற்பாடுகளே இங்கு வெற்றியைத் தீர்மானிப்பவையாக இருந்தன. தொடர்ந்தும் முன்னேறிச் சென்ற அணிகள் புதுக்குளம் சந்தி அருகே நிலையெடுத்துக்கொண்டன.

மணியந்தோட்டப் பகுதியால் கொழும்புத் துறையை நோக்கி நகர்ந்த கீர்த்தியின் அணி, வலதுபுறமாக அகலமான நிலப்பரப்பையும் விடுவித்துக்கொண்டு முன்னேறியது. எங்கு புலியால் வரமுடியாது என சிங்களப்படை நினைத்திருந்ததோ அங்கெல்லாம் திடீரெனப் புகுந்தோம். இதனால் திகைத்துப்போன படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களே அப்பகுதியில் அதிகமாக இருந்தன. தான் இருக்கும் இடத்தைத் தக்கவைப்பதற்காக எந்தளவு வெடிபொருட்களையும் இழக்கத் தயாராக இருந்தது இராணுவம். எனினும் அவர்களின் உயிரைக்கூட தக்கவைக்க முடியவில்லை என்பதாகவே இருந்தது நிலைமை. அணிகள் தொடர்ந்து முன்னேறி இப்போது கொழும்புத்துறையின் மீன்பிடித்துறைக்குச் சற்று முன்னதாக நிலையெடுத்துக்கொண்டன. உடனேயே நாவற்குழிப் பாலத்தருகே நிலைகொண்டிருந்த ஏனைய அணிகள் அரியாலைநோக்கி நகர்த்தப்பட, தற்காலிக நிலையமைக்கும் பணி முனைப்பெடுத்தது. இதுவரைநாளும் தேவையான இடத்துக் கெல்லாம் நகர்ந்து நகர்ந்தே எறிகணை உதவி வழங்கிய சிறிய ரக எறிகணை செலுத்திகள் தம்மை அடுத்த கட்ட நகர்வுக்குத் தயாராக்கும் நடவடிக்கைக்காக இந்த இடை நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டன.

இப்போது நாவற்குழிப் பாலத்தடியில் நிதியுடன் ஐந்து பேர் விடப்பட்டனர். கூடவே இம்ரான்-பாண்டியன் படையணிப் போராளிகளும், மறுநாள் ஒரு அணிகளும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் இதுவரை காலமும் சவாலாயிருந்த நாவற்குழிப்பாலம் எமது கைகளில் விழ, தொடர்ந்து அவ்வணிகள் கைதடிச் சந்தியைநோக்கி நகரத்தொடங்கின.

இந்நிலையில் அரியாலைப் பகுதியிலிருந்து ஒரு முன்னகர்வை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டது கட்டளைப்பீடம். தற்போது நாங்கள் நிலைகொண்டிருப்பது அரியாலையின் கட்டிடங்கள் நிறைந்த பகுதி. நெருக்கமான வீடுகளையும், உயர்ந்த மதில்களையும் கொண்ட பகுதியுள் உடைக்கக்கூடிய பாதையைத் தெரிவு செய்வதே சிரமமாக இருந்தது. மிகுந்த முயற்சியின் மத்தியில் முன்னேறுவதற்கான பாதை எடுக்கப்பட்டு அணிகள் தயார்படுத்தப்பட்டன. வேறோர் அணி தாக்குதலைத்தொடுத்து, குறிப்பிட்ட பகுதியைக் கைப்பற்றியபின், கீர்த்தியின் அணி தொடர்ந்து ஏனைய பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகத் திட்டம் இருந்தது.

திட்டத்தின்படி 2000.05.16 அன்றைய இரவில் தாக்குதல் தொடங்கியது. முன்னேயிருந்த நாலைந்து வீடுகள் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தன. எனினும் எதிர்ப்புப் பலமாக இருக்கவே, தொடர்ந்து ஏனைய இடங்களுக்கு நகரமுடியவில்லை. வீட்டைக் கைப்பற்றிய அணிகள் அடுத்த கட்டத்துக்காகக் காத்திருந்தன. இராணுவம் நின்ற வீட்டுக்கும், போராளிகள் நின்ற வீட்டுக்கும் இடையில் மதில் ஒன்று நீண்டு சென்றது. அங்கே இராணுவம் இங்கே போராளிகள். இருபக்கமும் மாறிமாறிச் சூடுகள் பரிமாறப்பட்டன. விடிந்தால் நடமாடுவது என்பது நினைத்துப்பார்க்க முடியாத விடயம். இதற்காகப் பொழுது காத்திருக்குமா?

அன்றைய காலைவேகமாகவிடிந்ததுபோல இருந்தது. கட்டிடச் சண்டையின் இடர்கள் இங்கு பெரிதாகத்தான் தெரிந்தன. யன்னல் ஓரத்தில் சிறிது நிழல் தெரிந்தாலும் உடனே இராணுவத்தின் PK LMG சடசடவென ரவை மழை பொழியும். அதேபோல் எமது சுடுகலன்களிலிருந்தும் சிறு மழை தூறும்.

காலை உணவு நேரம் கடந்தது. முன்னே நிற்கும் அணிகளுக்கு உணவு கொண்டுசென்று கொடுக்கமுடியாதளவுக்கு அந்தச் சூழல் இருந்தது. எப்படியும் அனுப்பியே தீரவேண்டும் என முடிவெடுத்தோம். எமது கனரக ஆயுதங்கள் காப்புச் சூடு வழங்க, படையினரின் சூடுகள் தடைப்பட்டன அல்லது மட்டுப்படுத்தப்பட்டன. இந்த வாய்ப்பைப்போல் ஓடிச்சென்று உணவைக் கொடுத்துவிட்டுத் திரும்பி ஓட்டத்தில் வந்துவிட்டனர். மதியம் PK LMGக்குப் பதிலாக 50 கலிபர் மூலம் காப்புச்சூடு கொடுக்கப்பட்டு ஓட்டப் பந்தயம் நடந்தது. எனினும் தாக்குதலணி முன்னே நகர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால் மறுநாள் அதிகாலை இருளோடு இருளாகப் பின்னே வந்து அணிகள் நிலைகொண்டன.

இங்கே நிலைமை இவ்வாறு இருக்க, ஜமுனாவுடனான அணி நாவற்குழிநோக்கி நகர்ந்தது. ஆனையிறவுச்சமரின் வெற்றியை வேகப்படுத்தும் முகமாக இத்தாவிலில் நின்ற ஜமுனாவின் அணியை, ஆரம்பப் பயிற்சியை முடித்துக்கொண்டு வந்திருந்த புதிய போராளிகளைக்கொண்ட லெப்.கேணல் தமிழ்செல்வியின் அணி மாற்றிவிட்டு அவ்விடத்தைப் பொறுப் பெடுத்துக்கொண்டதை முன்னர் பார்த்தோம். புதிதாகப் பயிற்சி முடித்து வந்த அந்தப் போராளிகளால் அனுபவம் மிக்க போராளிகள் நின்ற அதே காப்பரண்கள், நாள்தோறும் அச்சுறுத்தல் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அந்த முன்னரங்க வரிசை பாதுகாக்கப்பட்டுக்கொண்டிருந்தது. மேஜர் தமிழ்செல்வி, விடுதலை, சாம்பவி ஆகியோரின் தலைமையில் பிளாட்டூன்களாகப் பிரிக்கப்பட்ட புதிய அணிகூட இராணுவத்துக்குப் பெரும் சவாலாக நின்றது.

தொடர்ந்து ஆனையிறவு மீட்கப்பட, ஆனையிறவுப் பகுதியால் தாக்குதலைத் தொடுத்துக்கொண்டு வந்த அணியோடு இவர்கள் கைகுலுக்கிக்கொண்டதுடன், அந்தச் சமர்க்களம் மறுபுறமாகத் திரும்பியது. எழுதுமட்டுவாள் நோக்கியதாகக் கிளாலி முதல் தொண்டைமானாறு நீரேரி வரையுமான முன்னரங்க வரிசையில் நிலைகொண்டது தமிழ்செல்வியின் அணி. இதன் கட்டளைத் தளபதியாக நிஸ்மியா நியமிக்கப்பட்டார். கொம்பனி மேலாளராக தமிழ்ச்செல்வி நிற்க, கட்டளை அதிகாரியாக மிதுலா விடப்பட்டிருந்தார். சிறு சிறு தாக்குதல்களுடன் புதிய அணிகள் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டிருந்தது. களமுனை விரிந்து சமர்கள் வெவ்வேறு பகுதிகளில் அரங்கேற்றப்பட்டன.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 525. | லெப்.அழகுநிலா | கஜேந்தினி சிவலிங்கம் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 526. | லெப்.எழிலரசி/கொன்சி | சிவபாக்கியம் வைத்தியலிங்கம் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 527. | லெப்.தயாளினி | மேரிஸ்ரெலா கண்ணன் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 528. | கப்டன்.மதுவந்தி | வளர்மதி தூசைப்பிள்ளை | முல்லைத்தீவு | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 529. | கப்டன்.பார்த்தீபனா | மிருணாளினி பேரம்பலம் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 530. | கப்டன்.காந்திமதி | தனலக்சுமி செல்வன் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 531. | கப்டன்.ஜெனனி | ஜீவகாஞ்சனா தவராசா | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

# ஒற்றையாட்சியின் கீழ் சமஸ்டித் தீர்வு
## என்பது வேடிக்கைக்குரியது



அரசியல் யாப்பின் 13வது திருத்த சட்டத்தால் வழங்கப்பட்ட காணி, மற்றும் பொலீஸ் அதிகாரத்தையேனும் இதுவரை வழங்க மறுத்த ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு இனிப்பான சமஸ்டியை வழங்குவார்களா? ஜனநாயகத்தை அடியொற்றி மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்சி முறைகளில் ஒன்று சமஸ்டியாகும். அதிகாரம் ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அங்கத்துவ அரசுகளுக்கும் இடையே பிரிக்கப்பட்டுப் பிரயோகிக்கப்படுவது சமஸ்டியாகும். இது கனடா, பிரேசில், பெல்ஜியம், ஸ்பெயின், சுவிஸ்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைமுறையில் இருந்து வருகின்றது.

அந்த வகையில் இலங்கைத்தீவு பல்லின மக்களைக்கொண்ட ஒரு நாடாக காணப்படுகின்றது. அதில் கடந்த காலத்தில் தமது உரிமைகளுக்காகப் போராடி மிகவும் பாதிப்படைந்த ரீதியில் காணப்படுவது தமிழ் மக்களேயாவர். இலங்கையில் 1956ம் ஆண்டுக்குப்பின் உச்சம் பெற்ற அரசியல் மோதல்கள் வலுப்பெற்று 1983ம் ஆண்டுக்கு பின் எழுச்சி பெற்று ஆயுதப்போராட்டமாக வளர்ச்சி பெற்றது. இதற்கான காரணத்தை ஒரே வரிகளில் கூறுவதானால் அதிகாரம் என்பது பெரும்பான்மை சமூகத்தின் கைகளிலேயே அல்லது அவை தமிழர்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததேயாகும்.

இலங்கையில் ஆட்சிபீடம் ஏறும் சிங்கள ஆட்சியாளர்கள் மனநிலை காலம் காலமாக தமிழர்களை அடிமைப்படுத்துவதிலேயே நோக்கமாக கொண்டிருந்தது. இதன் அடிப்படையில் தான் தமிழ் மக்களுக்கும் சிங்கள அதிகார வர்க்கத்துக்கும் இடையில் குரோத மனப்பான்மை வளர்ந்தது. இது அறுபது வருடம் கொண்ட தீராத பகையாக வளர்ந்த உணர்வாகும். இதனை இன்று மறுதலிக்க முடியாது. இதன் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தமது தீர்வை பெறவேண்டும்என சிந்திக்கிறார்கள். மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டு விடுவோம் என அச்சம் கொள்கிறார்கள். இதனால் மற்றவர் பார்வையில் இனவாதிகளாக மாற்றப்படுகிறார்கள். தமது இனத்திற்காக குறைந்தபட்ச தீர்வாக தருவதை வாங்குவதற்கு பதிலாக இந்த நாட்டின் பூர்வீகத்தின் பங்காளிகள் என்பதால் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளத் துடிக்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி பற்றி தமிழ் மக்கள் இன்று பேசுகிறார்கள். மிகவும் சிக்கலான இன அமைப்பைப் பெற்றுவிட்ட இன்றைய வடகிழக்கு அல்லது நாட்டுக்குள் சமஸ்டி எப்படி சாத்தியம் என்பது பற்றியோ, சிங்கள அதிகார வர்க்கம் தமிழர்களை அடிமைப்படுத்தியது போல தமிழர்கள் யாரையும் அடிமைப்படுத்தக்கூடாது என்ற எண்ணமோ தற்போது வரை தமிழ் மக்களுக்கு எழவில்லை. அதுவே 1947ல் கோரப்பட்ட அதாவது 70 வருடங்களுக்கு முன் தமிழருக்கு தந்தை செல்வநாயகம் முன்மொழிந்த சமஸ்டி தீர்வாகும். இதனை விட முக்கியமானது அதனை இப்போது தான் தமிழ் தலைமைகள் ஆய்வு செய்கின்றமையாகும். இன்றைய சிக்கலான முறைக்குள் சமஸ்டி தீர்வை வழங்க நாட்டின் நிலைமை இடமளிக்கப்போவதில்லை. தமிழ் தலைவர்கள் அந்த தீர்வை பெரும் காலத்தை கடந்துவந்துவிட்டார்கள். இன்று பேரம் பேசும் சக்தி எதுவும் தமிழர்களுக்கு இல்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தீர்மானிக்கும் அதிகார பகிர்வே சாத்தியமாக காணப்படுகிறது.

70 வருடத்திற்கு முன்னர் பழமை வாய்ந்த ஓர் தீர்வாக அப்போது தமிழர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் இன்று குடியியல் பரம்பல் ஏது நிலைகள் மாற்றம் கண்டுவிட்டது. பூர்வீக தமிழர் நிலங்கள் பல்லின சமூகத்தின் வாழ்வியலை இன்று பிரதிபலிக்கிறது. திட்டமிட்டு தமிழர்கள் கலைக்கப்பட்டு நிலங்கள் அபகரிக்கப்பட்டாலும் மற்ற சமூகங்களின் இருப்பைத் தகர்க்க முடியாது.

இன்றுவரை திரும்பத்திரும்ப நாட்டின் ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது ஒற்றையாட்சியை அல்லது அதிகார பகிர்வு பற்றியே! அதை தவறென்றும் எடுத்தியம்ப முடியாது. ஏனெனில் அப்போதைய சிங்கள ஆட்சியாளர்கள் விட்ட தவறே தமிழ் மக்கள் ஒற்றையாட்சி பற்றிய தவறான நிலைப்பாட்டிற்கு வருவதற்கு காரணமாக அமைந்தது. இலங்கை என்பது எங்கள் நாடு என்ற சிந்தனை அற்றுப்போவதற்கு காரணம். ஆனால் ஆரம்ப தலைவர்களாக இருந்த இராமநாதன்,அருணாசலம் போன்ற தமிழ் தலைவர்கள் இலங்கை என்ற தேசபக்தியை தமிழர்களுக்கு விதைத்தனர். ஆனால் அதற்கான முட்டுக்கட்டைகள் தீவிர போக்கு கொண்ட சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்தை முன்னிறுத்திய பண்டாரநாயக்கா போன்ற தலைவர்கள் தமது அரசியல் வாழ்வைத் தக்கவைக்க, பெரும்பான்மை சமுகத்தை திருப்திப்படுத்த, தேவையற்ற முறையில் வாக்குறுதிகளை வழங்கி, இரு சமூகங்களிடையே மோதலைத்தோற்றுவித்து தமிழர்களின் நல்லெண்ணங்களைக் கலைத்தனர், திட்டமிட்டு தமிழர்களுக்கான அதிகாரங்களைப் பறித்தனர். அத்தகைய அன்றைய ஆட்சி முதல் இன்றுவரை இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான சம அந்தஸ்து இதுவரை கிடைக்கவில்லை. அதற்காக முட்டுக்கட்டைகளை போடுவதற்கு மட்டுமே சிங்கள ஆட்சியாளர்கள் முனைப்பு காட்டுகின்றனர். தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணைந்த வடக்கு கிழக்கில் சமஸ்டி ஆட்சியைக் கோருகிறது. இக்கோரிக்கையை பற்றி ஆய்வு செய்யாமல் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய பதவியை வகிப்பவர்கள்அனைவரும்வெளிப்படையாக நிராகரித்துவிட்டனர். அவர்கள் சமஸ்டி வழங்க முடியாது என்ற சமிக்ஞையை தெளிவாக சொல்லிவிட்டார்கள். எனவே தான் மீண்டும் தமிழர்களுக்குள் அதிகாரப் போட்டி ஏற்படப்போகிறது. அது சமஸ்டி என்ற சொல்லின் மூலம் மீண்டும் ஏற்படுத்தப்பட போகின்றது. அதை எவ்வளவு காலம் சென்றாலும் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவும் போவதில்லை. அதை ஏற்றுக் கொள்வதற்கான மூலோபாயங்கள் இந்த நாட்டுக்குள்ளும் காணப்படவில்லை. ஆட்சியின் அதிகாரத்தில் உள்ளவர்களின் நிராகரிப்பை இனவாதம் கொண்டு தமிழர்கள் இனிவரும் காலங்களில் நோக்குவது தவறானது. சமஸ்டி தீர்வை வழங்க இலங்கையின் பல்லின அமைப்பு முறை, இனபரம்பல் முறை இடம் கொடுக்குமா என்பது பற்றியே அழமான ஆய்வுகள் தேவை.

புதிய அரசியல் தீர்வை பெறுவது தொடர்பாக திறந்த உரையாடல்கள் தமிழ் தலைமைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆட்சிபீடத்தில் உள்ளவர்களுடன் எதிர்க்கட்சியாய் இருக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சமஸ்டி தீர்வு யோசனைகளை பற்றி திறந்த மனதுடன் பேசவேண்டும். வெறுமனே தமிழ் மக்கள் மத்தியில் பேசி விட்டு இதுதான் தீர்வு என இடித்துரைப்பது உசிதமானதன்று. கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் எல்லாம் சிங்கள பெரும்பான்மையை நோக்கி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நகர்த்திச் செல்லவேண்டும். தெற்கில், சமஸ்டி கேட்பவர்களை இனவாத தமிழர்களாய் நோக்கும் தென்னிலங்கை சமுகத்துக்கும், சமஸ்டி இலங்கைக்கு பொருத்தமில்லை என்ற சமூக விஞ்ஞான கோட்பாட்டுக்கும் பதிலளிக்கும் மன நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இல்லை. உண்மையாகவே இலங்கையில் சமஸ்டி தீர்வை வகுப்பதற்கான ஏது நிலைகள் இல்லை. ஆனால் கடந்தகால காழ்ப்புணர்வுகள், ஏமாற்றங்கள், அழிவுகளை கருத்திற்கொண்டுதனித்துவாழசமஸ்டி கேட்பது இன்னும் பல இனக்குழுமங்கள் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தையும் தூண்டும். அதன் பின் வடக்கு கிழக்கில் அல்லது கிழக்கில் தனி இன்னுமொரு சுயாட்சி



பிரதேசத்தை அது ஊக்குவிக்கும் அது மீண்டும் ஒரு பிரிவினைக்கு வழிகாட்டும். எனவே தான் ஆட்சியாளர்கள் அச்சம் எதிர்காலத்தை நோக்கி நகர்கிறது.

இலங்கைக்குள் பார்வையை செலுத்தும் போது தமிழர் செறிந்து வாழும் பகுதி, சிங்களவர் செறிந்து வாழும் பகுதி, இந்திய வம்சாவழி மக்கள் செறிந்து வாழும் பகுதி, தமிழர் பகுதிக்குள் செறிந்து வாழும் முஸ்லிம்கள், பெரும்பான்மை சிங்கள மக்கள் வாழ்கின்ற பகுதிக்குள் செறிந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் என ஒரு சிக்கலான வாழ்வியலே காணப்படுகிறது. இங்கு தமிழர்கள், சிங்களவர்கள் என தீர்வை வழங்க முடியாத நிலையை கவனத்தில் கொள்ளவேண்டும்.

சமஸ்டி ஆட்சி முறையானது பிரிவினைவாதத்தைநோக்கி செல்லும் அல்லது ஊக்குவிக்கும் முக்கிய காரணியாக உள்ளது. இதன் அடிப்படையில் தமிழருக்கு என்றோ வடக்கு கிழக்குக்கு என்றோ சமஸ்டி தீர்வை முன்வைக்க ஆட்சியாளர்கள் விரும்பமாட்டார்கள். குறிப்பாக சொன்னால் நாம் இலங்கையர் என்ற எண்ணம் ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்படுவதை சமஸ்டி தடுத்துவிடும். உதாரணமாக நாட்டை நாம் பிரதிநிதித்துவம் செய்யாமல் மாகாணங்களை முதன்மையாகக்கொண்டு தமிழர், சிங்களவர், முஸ்லீம் என்ற எண்ணத்தை விதைத்துவிடும் என்ற ஆழமான பார்வை சிங்கள ஆட்சியாளர்களிடம் உண்டு. இதனடிப்படையில் சமஸ்டி என்பது இலங்கைக்கு எட்டாத தீர்வாக சொல்கிறார்கள்.

தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை வழங்குதல், பிரதேச சுயாட்சி வழங்குதல் என்பன பெரும்பான்மை சிங்கள மக்களை பொறுத்தவரை கசப்பான விடயமாகும். இங்கு ஒரு நகைப்புக்கான விடயம் என்னவெனில் தற்போதைய அரசியல் யாப்பின் 13வது திருத்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட காணி, மற்றும் பொலீஸ் அதிகாரத்தையேனும் இதுவரை வழங்க மறுத்த ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு இனிப்பான சமஸ்டியை வழங்குவார்களா? என்பதை மறந்து, சமஸ்டியை முன்கொண்டு செல்வது பொறுத்தப்பாடுகள் அற்றதே!

தற்போது சமஸ்டியை நடைமுறைப்படுத்தும் நாடுகளை ஆய்வு செய்தால் அங்கு தீவிர வாதம் மிக்க அல்லது இனவாதம் மிக்க பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை எல்லாம் ஒரே வகையானது என்று கூறமுடியாது. எங்கெல்லாம் பிராந்திய மேலாதிக்கம் வலுப்பெறுகிறதோ அங்கெல்லாம் மத்திய அரசுடன் மோதல் தீவிரம் பெறுகிறது. இன்றைய யதார்த்தத்தில் கிழக்கு மாகாண ஆட்சிக்கும், வடக்கு மாகாண ஆட்சிக்கும் இடையே ஒப்பீட்டை மேற்கொள்ளலாம். கடந்த காலங்களில் மத்திய அரசுடன் தீவிரமாக போரிட்ட வடக்கு ஜனநாயகமும், மத்திய அரசுடன் இணங்கி ஒரு அலகாக செயற்பட்ட கிழக்கு மாகாண ஆட்சியையும் நினைவில் கொள்ளமுடியும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மூன்று சமூகங்களின் பரம்பல் சமஸ்டிக்கு வளைந்து கொடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அற்ற நிலையிலேயே உள்ளது. இங்கு சமஸ்டியை வழங்கினால் கிழக்கு மாகாணம் எதிர்காலத்தில் மூன்று சமூகங்களின் உச்சமான தீவிர மோதலை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இன்று உலகில் அனைத்து நாடுகளும் காலனித்துவ அல்லது குடியேற்றவாத நாடுகளாகவே இருந்துள்ளன. பல நாடுகளில் மக்கள் தாமாக புலம்பெயர்ந்து குடியேறியவர்களே. அல்லது நாடுகள் தமது மக்களை காலனித்துவ ஆட்சியில் குடியேற்றின. அதேபோல அடிமைகளாகவும் கொண்டு செல்லப்பட்டனர். இந்த மக்களே பல சமூகங்களாக இன்று உலகில் இருக்கின்றனர். இன்று பல்வேறு நெருக்கடிகள் இனங்களிடையே நாடுகளுக்குள் நடைபெறுகின்றன, அது ஆசியா என்றோ ஐரோப்பா, ஆபிரிக்கா என்றோ ஒற்றைச்சொல்லில் அடக்கிவிட முடியாது. எனவே அந்த நெருக்கடிகளுக்கு எல்லாம் பொதுவாக தீர்வை வழங்க வேண்டும். ஆனால் அந்த தீர்வு நீறுபூத்த நெருப்பாய் வளர்வதற்கு இடமளிக்கக்கூடாது அவை மீண்டும் இனங்களுக்குள் பிரிவினையை விதைக்க ஆயுதமாக இருக்கக் கூடாது. சமஸ்டி என்பதை பெற்றால் அடங்கி போகும் சமூகத்துக்கு இசைவான நிலையை கடைப்பிடிக்க வேண்டிவரும். அதன் மூலம் சமஸ்டி நிலைக்கக்கூடிய நிலையான உறுதியை பெற்றுவிடும். அதைவிடுத்து கடும் தீவிரவாத போக்குகொண்ட சமூகங்களுக்கு இத்தீர்வு எட்டாத பொருத்தமே!

பல்லின சமுக ஒழுங்கமைப்பை கொண்டுள்ள இலங்கையில் மலையக தமிழ் மக்கள் தமக்கு சமஸ்டி முறையான அரசியலமைப்பைக் கோருவதற்கு முடியாத நிலையிலேயே உள்ளனர். காரணம் அவர்கள் பெரும்பான்மை சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம் என ஒரு சேர மலையகத்தில் வாழ்கின்றனர். அவர்கள் இலங்கையில்தமிழர்கள்,சிங்களவர்களுக்கு இடையிலான மோதல்களால் இயல்பு நிலையை இழந்தவர்களே தவிர, பாதிக்கப்பட்ட தரப்பல்ல.

12ஆம் பக்கம் பார்க்க...

-கீரன்-

# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் எட்டாவது தேசிய மகாநாடு






ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் எட்டாவது தேசிய மகாநாடு (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை வவுனியா உமாமகேஸ்வரன் வீதிச் சந்தியில் அமைந்துள்ள ஆதி திருமண மண்டபத்தில் முற்பகல் 9.30மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கட்சியின் ஸ்தாபகர் அமரர் க.உமாமகேஸ்வரன் அவர்களின்நினைவில்லத்தில்அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து மகாநாட்டு மண்டபத்தில் சுடரேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. கட்சியின் தலைவர். செயலாளர். நாடாளுமன்ற உறுப்பினர்கள். வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள். வெளிநாட்டுக் கிளைகளின் பிரதிநிதிகள் மற்றும் ஒவ்வொரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் சுடரேற்றிவைத்து மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளரும். மகாநாட்டு ஏற்பாட்டுக்குழுத் தலைவருமான க.சந்திரகுலசிங்கம் (மோகன்) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். அவரது உரையினைத் தொடர்ந்து கட்சியின் லண்டன் கிளை சார்பில் கலந்துகொண்டிருந்த லண்டன் ஈஸ்ட்ஹாம் உபநகரபிதா போல் சத்தியநேசன். கட்சியின் பிரான்ஸ் கிளை சார்பில் கலந்துகொண்டிருந்த ஜென்னி ஜெயச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள். தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன். வடக்கு மாகாணசபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோர் உரையாற்றினார்கள். தொடர்ந்து கட்சியின் செயலாளர் சு.சதானந்தம் அவர்களால் கட்சியின் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டது.

இதனையடுத்து மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. காந்தீய அமைப்பினது காலத்திலும். 1990ம் ஆண்டுக்கு பிந்திய காலத்திலும் அமைப்பின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று முதுமை காரணமாக செயற்பாடுகளை நிறுத்தியுள்ள மூத்தவர்கள் மகாநாட்டுப் பேராளர்கள் முன்பு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் அவர்கள் உரைநிகழ்த்தினார். அவரது உரையினைத் தொடர்ந்து கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வை.பாலச்சந்திரன் அவர்கள் நன்றியுரையாற்றினார். மேற்படி மகாநாட்டிற்கு 12 நாடுகளிலிருந்து 18 பிரதிநிதிகளும். வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பெருமளவிலானோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

**படங்களும் தகவலும்:- ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி**














# வடமாகாண சபையின் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமா?



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மாகாணசபையின் அதிகாரங்களையும், ஆட்சி முறையினையும் வேண்டாமென உதறித்தள்ளினார். 1989ன் காலப்பகுதியில் பிரபாகரன் இந்திய உலங்கு வானூர்தியின் மூலம் சுதுமலையில் வைத்து இந்தியாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அசோஹா ஹோட்டலில் தங்கவைக்கப்பட்ட பிரபாகரன் ராஜீவ்காந்தியைச் சந்திப்பதாகவே இருந்தது. ஆனாலும் அவர் இராணுவ உயர் அதிகாரிகளினால் அச்சுறுத்தப்பட்டார். இந்திய உயர் அதிகாரிகள் மாகாணசபை ஆட்சிமுறையினை ஏற்றுக்கொள்ளுமாறும், அதற்கு தாம் முழு அளவில் ஆதரவு வழங்குவதாகவும் கூறி அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுமாறும் கூற. அதனை மறுத்த பிரபாகரன் நான் தமிழ் மக்களிடம் சென்று இவ்விடயம் தொடர்பாக வினவியதன் பின்னரே இதற்கான தீர்வினை மேற்கொள்ளவேண்டும் என பதில் வழங்கினார். அத்துடன் உமது மனைவி, பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ உமக்கு விருப்பம் இல்லையா? என பிரபாகரன் அச்சுறுத்தப்பட்டார். அதற்குப் பிரபாகரன் ஒரு போராட்டம் குறித்துச் சிந்திக்கும் போர்வீரனுக்கு குடும்பம் பெரிதல்ல. நாட்டு மக்களே அவசியம் என இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு அவர் பதிலளித்தார்.

இன்று பதவி, அந்தஸ்துக்காக அரசியலில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சில வடமாகாண சபையின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் இவ்விடயத்தை கருத்திற்கொள்ளவேண்டும். தமிழினத்தின் விடுதலைக்காகப்போராடிய பிரபாகரன் ஏன் மாகாண சபையின் அதிகாரங்களை மறுத்தார். குறிப்பாக மாகாண சபையின் 13வது திருத்தச்சட்டத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இருக்கின்றபோதிலும் அது எமக்கு உரிய முறையில் வழங்கப்படவில்லை எனில் அதனைப்பெற்றுக்கொள்வதில் என்ன பயன் என்பது குறித்துச் சிந்திக்கவேண்டும். இது இவ்வாறிருக்க தற்போதைய வடக்கின் மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், சுகாதார அமைச்சர்.சத்தியலிங்கம், விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், கல்வியமைச்சர் குருகுலராஜா போன்றவர்களால் தங்களது பதவிக்காலங்களில் மக்களுக்கு போதியளவு நலன்கள் கிடைக்கப்பெறவில்லை என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிலையில் 16 வடமாகாணசபை உறுப்பினர்கள், 21/2 வருடங்களின் பின்னர் அமைச்சுப்பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கையொப்பமிட்டு வடக்கு முதலமைச்சரிடம் அதனைக் கையளித்தபோதும் அமைச்சுப்பதவிகளில் அவர் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. இதனால் தமிழ் மக்களும், வடமாகாணசபை உறுப்பினர்களும் குழப்பமடைந்துள்ள நிலையில் அடுத்து அமைச்சுப்பதவிகள் யாருக்கு வழங்கப்படும் என ஆவலாக உள்ளனர்.

வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் அவர்கள் மீதான குற்றச்சாட்டாக, வைத்தியசாலையின் நோயாளர்களுக்கான உலர் உணவு வழங்கல் தொடர்பில் கேள்வி கோரலில் ஏற்பட்டுள்ள மோசடிகளாகும். இவ்விடயம் தொடர்பான குற்றச்சாட்டு 15.04.2016அன்று க.கந்தசாமி, திருவையாறு, கிளிநொச்சி என்பவரால் வடமாகாணசபை அமைச்சுக்கும், அதன் செயலாளர்களுக்கும், தமிழரசுக்கட்சி செயற்பாட்டுக்குழு உறுப்பினர்களுக்கும், அனைத்து மாகாணசபையின் உறுப்பினர்களுக்கும், வணக்கத்துக்குரிய இராயப்பு.ஜோசப் ஆண்டகை அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் வடமாகாணத்தில் அமைந்துள்ள 18 வைத்தியசாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் என்ன? கோரிய விலைகளும், கட்டுப்பாட்டு விலைகளுமாக,

**பருப்பு கிலோ 150ரூபா. கோரிய விலை 210ரூபா. வித்தியாசம் 60ரூபா. ஒரு நாளைக்கு தேவைப்படும் பருப்பு 750 கிலோ.**

**சீனி ஒரு கிலோ 100ரூபா. கோரிய விலை 125ரூபா. வித்தியாசம் 25ரூபா. ஒரு நாளைக்கு 500கிலோ.**

**மிளகாய்த்தூள் கிலோ 340ரூபா. கோரிய விலை 700ரூபா. வித்தியாசம் 360ரூபா. மாதாந்தம் 750கிலோ.**

**அங்கர் 400கிராம் 320ரூபா. கோரிய விலை 350ரூபா. வித்தியாசம் 30ரூபா. மாதாந்தம் 750.**

**வாழைப்பழம் 30ரூபா. கோரிய விலை 120ரூபா. வித்தியாசம் 90ரூபா. மாதாந்தம் 5000கிலோ.**

**தேங்காய் 35ரூபா. கோரிய விலை 70ரூபா. வித்தியாசம் 35ரூபா. மாதாந்தம் 5000.**

**கத்தரிக்காய் 40ரூபா. கோரிய விலை 180ரூபா. வித்தியாசம் 140ரூபா. மாதாந்தம் 1500கிலோ.**

இந்த 07பொருட்களில் மாத்திரம் 10இலட்சம் ரூபா மாதமாகப் பெறப்படுகிறது. 2014/2015ஆம் ஆண்டிற்கான கேள்விக்கோரல் முன்னையது போலவே எவ்வித மாற்றமுமின்றி 05வைத்தியசாலைகளிலும் இந்த மோசடி இடம்பெற்றுவருகின்றது. இவ்விடயம் தொடர்பான விரிவான ஆதாரங்கள் தினப்புயல் ஊடகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் உறுதிப்படுத்தப்படாததன் காரணமாக அதனை நாம் வெளியிடவில்லை. இதனது முழுவிபரங்களும் ரவீந்திரன் (சுகாதார அமைச்சின் செயலாளர்) அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும் இதற்கான தீர்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**அமைச்சர் டெனீஸ்வரன்**

இவர் குறிப்பாக போக்குவரத்து மற்றும் மீன்பிடி போன்ற துறைகளில் பெருந்தொகையான பணத்தினை நுட்பமான முறையில் கையாண்டுள்ளார் என்பதே இவர் மீதான குற்றச்சாட்டாகும். குறிப்பாக இவர் மன்னார் மாவட்டத்தினை உள்ளடக்கிய பிரதேசங்களில் மாத்திரம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்ததுடன் ஏனைய பிரதேசங்களில் கண்துடைப்பான வேலைகளே செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் டெனீஸ்வரனிடம் தொடர்புகொண்டு வினவியபோது குற்றம் சுமத்துபவர்கள் குற்றத்தைக் கூறிக்கொண்டேயிருப்பார்கள். அதற்காக எமது பணிகளை நிறுத்தமுடியாது. நான் பதவி ஆசை கொண்டவன் அல்ல. அவ்வாறு எனது பதவி யாருக்கும் தேவை எனில் என்னுடன் தனிப்பட்ட ரீதியில் கதைத்தால் நான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வேன். நான் மாகாண சபையின் உறுப்பினராக இருந்துகொண்டு மக்களுக்கான சேவைகளைச் செய்வேன். பொதுவாகவே RDA எவ்வாறு பணத்தைக் கொள்ளையடிப்பார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் கோடிக்கணக்கான பணம் கொள்ளையடிக்கப்பட்டமை பதியப்பட்டுள்ளது. வீதி நெடுஞ்சாலைகள் அமைச்சராகவிருந்த ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே கொலை செய்யப்பட்ட பின்னர் அப்பதவியை கோத்தபாய ராஜபக்ஷ அவர்களே எடுத்துக்கொண்டார் என்பதும் சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயம். களவு எடுப்பவன் ஒருபோதும் தன்னை கள்வன் என ஒப்புக்கொள்ளப்போவதில்லை. அமைச்சர் டெனீஸ்வரனைப் பொறுத்தவரை மக்களிடையே செல்வாக்குப் பெருகி வரும் நிலையில் அதற்கு சேற்றினைப்பூசும் விதமாகவே அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. அவரது செயற்பாட்டில் சிறந்த விடயம் என்னவெனில் சகல இனங்களையும் ஒன்றாக இணைத்து செயற்படுவது என்பதுதான். இவ்விடயம் ஒருபோதும் சாத்தியப்படாது என்றாலும் கூட அவரது முயற்சி பாராட்டத்தக்கது.

**அமைச்சர் ஐங்கரநேசன்**

வடபகுதியில் விவசாயம் என்பது மக்களது பொருளாதாரத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது. இதில் உரமானியம், குளக்கட்டுமானம், நீர் வழங்கல் போன்றவற்றிற்கு பணம் பெருவாரியாக அமைச்சினால் ஒதுக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் அமைச்சினையும் இவரே கொண்டிருப்பதனால் பாத்தீனிய அழிப்பு நடவடிக்கைகளிலும் பெருந்தொகை பணம் வழங்கப்பட்டபோதிலும் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பாத்தீனியம் பெரிதாக அழிக்கப்படவில்லை. இதற்காக வழங்கப்பட்ட நிதி எங்கே எனக்கேள்வி எழுப்பப்படும் அதே நேரம் குளக்கட்டுமானங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணமும் இவரால் சூறையாடப்பட்டுள்ளது என்கிற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

அது மட்டுமல்லாது அவரது மகளை வைத்தியத்துறையில் கற்பிப்பதற்கு 04கோடி ரூபா பணம் அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக வடமாகாணசபையின் உறுப்பினர் ஊடகவியலாளர் மாநாடொன்றில் தெரியப்படுத்தியிருந்தார். இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவியபோது, இது தனிப்பட்ட பழிவாங்கலே தவிர, எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் நான் செய்த வேலைகள் குறித்த அனைத்து ஆதாரங்களையும் அவர் எம்மிடம் சமர்ப்பித்திருந்தார். பகிரங்கமாகவே வடமாகாணசபையிலும் இவர் தொடர்பான ஊழல் நடவடிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதுவும் தோல்வியில் முடிவடைந்தது. இதிலும் களவு செய்த கள்வன் பிடிபடவில்லை.

**அமைச்சர் குருகுலராஜா**

இவர் மீது ஊழல் மோசடிகள், லஞ்சம் போன்ற குற்றச்சாட்டுக்கள் இல்லாதபோதிலும் மக்களின் சேவைகளில் அக்கறைகொள்ளாத தன்மை என்பதே இவர் மீதான குற்றச்சாட்டு. குடிபோதையில் இருப்பது என்பது அவரது தனிப்பட்ட விடயங்கள். அதனைக் குற்றச்சாட்டாகக் கொள்ளமுடியாது. 2016இல் வடபகுதியின் கல்வி வளர்ச்சி குன்றியுள்ளது என்பது மற்றொரு குற்றச்சாட்டு. இதனைச் சீர்செய்வதற்கு தற்போது இருக்கக்கூடியவராக மாகாணசபையின் உறுப்பினர் அரியரட்ணம் தகுதியுடையவர் என சிபாரிசு செய்யப்படுகிறது. இதுபோன்று சுகாதார அமைச்சருக்குப் பதிலாக வைத்தியர் குணசீலன் அவர்களைத் தெரிவுசெய்யுமாறு சிபாரிசு செய்யப்படுகிறது. மீன்பிடி, போக்குவரத்து அமைச்சுக்காக மாகாணசபை உறுப்பினர் அன்ரன் ஜெகநாதன் அல்லது வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் இருவரில் ஒருவரை நியமிக்க சிபாரிசு செய்யப்படுகிறது. விவசாயத்துறை அமைச்சினை வடமாகாணசபை உறுப்பினர் சர்வேஸ்வரனுக்கு வழங்கலாம் என சிபாரிசு செய்யப்படுகிறது. இதற்கிடையில் இவர்கள் அமைச்சுப்பதவியினை ஏற்று 02வருடங்களைக் கடந்துள்ள நிலையில் புதிதாக அமைச்சுப் பதவியினை ஏற்று மக்களுக்காக சேவை செய்ய வருபவர்கள் அவர்களும் தமது காலை ஊன்றுவதற்கு குறைந்தது 01 வருடங்களாவது எடுக்கலாம். அவர்களும் இந்த அமைச்சுக்களின் நெழிவு சுழிவுகளை முதலில் அறிந்துகொள்வார்கள். பின்னரே பரந்தளவில் செயற்படுவார்கள் என்பதே யதார்த்தபூர்வமான உண்மை.

பிரதிஅவைத்தலைவர்அன்ரன்ஜெகநாதனின் கருத்தின்படி, அமைச்சர்கள் கொள்ளையடிப்பது எமக்குத் தெரியும். அதைப்பற்றி நாம் அலட்டப்போவதில்லை. எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்பதே எனது உத்தேசம். இவர்கள் மீது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பது என்பது உண்மை. அவ்வாறு அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படாதுவிடின் இவர்களின் மீதான குற்றங்களை நாம் பகிரங்கப்படுத்தவேண்டிய நிலை ஏற்படும். அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என 16உறுப்பினர்கள் அடங்கலாக கையொப்பமிட்டு முதல்வரிடம் சமர்ப்பித்திருந்தோம். அவர் அதனைக் கண்டுகொள்ளவில்லை. இவ்விடயம் தொடர்பாக மேலும் அழுத்தங்களைப் பிரயோகிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார். அரசியலில் படித்தவரோ, படிக்காதவரோ, ஏழை பணக்காரரோ என இல்லை. அனுபவத்தின் மூலமாகவே அரசியலைக்கொண்டுசெல்ல முடியும். பெரிதளவில் கல்வியறிவில்லாதவர்களே அரசியலில் இருக்கிறார்கள். இவர்கள் நிர்வாகத்தினை நடத்தவில்லையா. நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கொண்டு செல்லவில்லையா. எவர் மக்கள் நலனில் அக்கறையுடன் செயற்படுகின்றார்களோ அவர்கள் நாட்டுக்காக நிச்சயம் உழைப்பார்கள் என்பது உண்மை. அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்றார்.

இதற்கிடையில் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் மாகாண சபையில் நடக்கக்கூடிய பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதன் ஊடாக, அதற்குள் தங்களது செயற்பாடுகளை நுழைப்பதற்கு அவர்கள் தீவிரம் காட்டுவார்கள். ஆகவே அதனைக்கருத்திற்கொண்டு முதலமைச்சர் அனைத்து அமைச்சர்கள், மாகாணசபையின் உறுப்பினர்களை அழைத்து இதற்கான தீர்வுகளை மேற்கொள்ளவேண்டும். ஒரு தலைவன் என்பதற்கு சிறந்த உதாரணம் அவையை அடக்குவது என்பது. அவையை அடக்கத்தெரியாத ஒருவன் அரசனாக இருக்க முடியாது. அவையையும், அரசனையும் அடக்கும் அளவிற்கு ஔவையாரின் பேச்சுத்திறன் இருந்ததாக பாடசாலை காலங்களில் படித்திருக்கிறோம். அரசனைப் பார்த்து "வரப்புயர" என்று மட்டும் பாடிவிட்டு அமர்ந்தார் ஔவையார். அரசியல்வாதிகளும் அவ்வாறே. அதனது அர்த்தங்கள் புரிந்தவர்களாக செயற்படவேண்டும். இடம், பொருள், ஏவல் என்பது அரசியலில் முக்கியமானது. மாகாணசபையில் இருப்பவர்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் நடாத்த முனைவோமாகவிருந்தால் மத்திய அரசாங்கம்இதனைஉன்னிப்பாகஅவதானித்து தமது கட்சிக்குள் அவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மாகாணசபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் கூறுவதில் தவறில்லை. தவறு எங்கு நடந்தது என்பதைக்கண்டறிந்து அதற்கான தீர்வினைப்பெற்றுக்கொள்வது முதல்வரின் கையில்தான் தங்கியுள்ளது. வால் மாத்திரம் ஆடி ஒன்றும் செய்ய இயலாது. தலையும் ஆடவேண்டும். அத்தலையாக இருப்பவர் முதல்வரே. ஒரு தலைவன் எப்படிச் செயற்படுகின்றானோ அவ்வழியிலேயே ஒரு கூட்டம் செல்லும். இன்னொரு கூட்டம் இவர்கள் தொடர்பாக விமர்சனங்களை முன்வைக்கும். இதுவே உண்மை. இருக்கின்ற அமைச்சர்களைக்கொண்டு மாகாண சபையினைக் கொண்டுசெல்வதா அல்லது அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவருவதா என்பதில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். இல்லையேல் வடமாகாணசபையில் ஒரு குழப்பமான சூழ்நிலையில் எதுவும் நடக்கலாம் என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

**நெற்றிப்பொறியன்**

# விடுதலைப்புலிகளை நான் முற்று முழுதாக எதிர்த்தவன் அல்ல, அவர்களின் சில வன்முறைகளை கண்டித்தவன் - வீ.ஆனந்தசங்கரி

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

நான் ஒரு காந்தியவாதியாக சிறு வயதிலிருந்தே அகிம்சையை முன்னெடுத்தவன். இம்சையை வெறுத்தவன். அதற்காகத்தான் எனக்கு ஒரு விருது கிடைத்தது. அதனைக்கூட லஞ்சம், செல்வாக்கை பாவித்து பெற்றதாக விமர்சித்தனர். இது காந்தியத்தோடு சம்பந்தப்பட்ட விருது என்பதை அறியாதவர்கள். தந்தை செல்வா, தலைவர்கள் ஜீ.ஜீ ஆகியோரின் தலைமையிலேயே தமிழர் விடுதலைக்கூட்டணி செயற்படவேண்டும் என்று அதன் தலைவர்கள் கனவு கண்டனர். தந்தை செல்வாவின் பெரும் கனவு இதுவாகும். தான் ஆரம்பித்த தமிழரசுக் கட்சியை மூடிவிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணியையே தன் சொத்தாக தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்றார். அக்கட்சியில் ஆரம்பகால உறுப்பினராக செயற்பட்ட அமரர் அமிர்தலிங்கம் அவர்களும் அதனையே கனவாகக் கண்டார். அவரின் பாரியார் தன் கணவர் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பற்றி எவ்வாறான கருத்தினை கொண்டிருந்தார் என்றும் தமிழரசு கட்சியின் பெயர், சின்னம் துஸ்பிரயோகம் செய்யப்படலாம் என்று பயந்தே தமிழரசு கட்சியை பதிவு செய்து வைத்திருந்தார் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கை என்னிடம் உள்ளது. விடுதலைப்புலிகளை நான் முற்று முழுதாக எதிர்த்தவன் அல்ல. அவர்களின் சில வன்முறைகளை கண்டித்தவன் நான். இருப்பினும் ஆனையிறவை உங்களால் பிடிக்கமுடியும் என்று பகற்கனவு காணாதீர்கள் என நேரடியாக பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சரை கேட்டவன் நான். இதற்கு மாறுபட்ட கருத்து என்னைப்பற்றி வெளியிட்டபோதும் இன்றுவரைசம்பந்தப்பட்டதமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாய் திறந்து உண்மையை பேசவில்லை. ஏனையோர் எதுவும் தெரியாததுபோல் நடிக்கின்றனர். மேலுமொரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சரை 35000 போர் வீரர்களின் உயிரை காப்பாற்றித்தாருங்கள் என்று பிறநாடுகளிடம் மண்டியிட்டு கேட்டது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாது என்று இறுமாப்புக் கொள்ளாதீர்கள் எனக் கூறியுள்ளேன். நான் தம்பி பிரபாகரனுக்கு பல கடிதங்கள் எழுதினேன். அதில் ஒன்றையேனும் வாசித்து அதற்கு மறுப்பு தெரிவித்து இன்றுவரை எவரும் எனக்கு பதில் எழுதவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் பிரபாகரனே என்னைப்பார்த்து ஆனந்தசங்கரி அண்ணைதான் ஒருவருடன் அடிக்கடி பாராளுமன்றத்தில் மோதுகின்றவர் எனக்கூறி தான் என்னைப்பற்றி கொண்டிருந்த கருத்தை மறைமுகமாக பாசத்துடன் வெளிப்படுத்தினார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி எந்தச்சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளுக்குமாறாகசெயற்படவில்லை. எப்போதும் பல விடயங்களில் நல்ல கருத்தையே வெளியிட்டது. கிளிநொச்சியை விடுதலைப்புலிகள் கைவிட்டு சென்றபோது என்னால் எழுதப்பட்ட பல விடயங்களில் சில கிளிநொச்சி தோல்வியடைந்ததன் பின் இந்த யுத்தத்தில் வெற்றி காணமுடியாது என்றும் ஏதாவதொரு உடன்பாட்டுக்கு வந்து பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை தம்பி பிரபாகரனோடு தொடர்புகொண்டு காப்பாற்றுமாறும் அன்றேல் பாராளுமன்ற பதவிகளை துறந்துவிடுங்கள் என்று விடுதலைப் புலிகளை வைத்து வியாபாரம் செய்தவர்களை பார்த்துக்கேட்டேன். அரசாங்கத்தை பார்த்து நீங்கள் புலிகள் அல்ல. நட்புறவுள்ள வேறு நாட்டோடு தொடர்புகொண்டு அவசியம் ஏற்பட்டால் நிபந்தனையற்ற மன்னிப்பு கொடுத்து அந்த அப்பாவி மக்களை காப்பாற்றவேண்டிய கடமை உங்களுக்கு உண்டு என்று சுட்டிக்காட்டினேன். பல ஆலோசனைகளையும் அரசுக்கு வழங்கினேன்.

யுத்தம் முடியப்போகும் கட்டத்தில் இந்திய வெளியுறவு செயலர் விடுத்த அவசர அழைப்பை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நிராகரித்து பதில் அனுப்பியதை நான் கண்டித்து எழுதிய கடிதத்தில் நாட்டில் இருக்க வேண்டிய நீங்கள் உங்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் வெளிநாடுகளில் சுற்றுகிறீர்கள் என சுட்டிக்காட்டினேன். தம்பி பிரபாகரனுக்கு மிக்க மனவருத்தத்துடன் எழுதிய கடிதத்தில் தம்பி மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுடைய சாபத்திற்கு நீரும் உமது சந்ததியும் ஆளாவீர்கள். மக்களை விடுவிக்கஉதவுங்கள்என்றுகேட்டேன். இந்தக் கட்டத்தில் செயற்பட்டிருக்க வேண்டியவர்கள் யார்?

அன்று தம்பி பிரபாகரனை இவர்களால் சந்தித்திருக்க முடியாதா? அன்று அவரிடம் பேசியிருக்க முடியாதா? அன்று இவர்களில் எவரும் ஏதாவது ஒரு முயற்சி எடுத்தார்களா? இவர்களுடன் தொலைபேசியூடாக முயற்சிகள் மேற்கொண்டவர்களுக்கு இவர்களுடைய மௌனித்த தொலைபேசிகளே பதிலளித்தன. இதன்மூலம் இவர்களின் சுயரூபம் உலகுக்கு வெளிப்பட்டது. இதனை கண்டிக்க யாருமில்லை. அதைவிடுத்து தந்தையை இழந்த ஒரு தனயனை எல்லோரும் சேர்ந்து குட்டுவது போல் என்னையே ஏன் குட்டுகின்றீர்கள்? நான் மக்களுக்கு எவ்வித துரோகமும் செய்யவில்லை. இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசுடன் பேசுவதற்கு புலிகளுக்கு பூரண அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்று ஒரு தடவையல்ல பல தடவைகள் கூறியிருந்தேன். 14 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 36 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று யாழ் மாவட்டத்தில் ஒன்பது பேரில் முதலாவதாக வந்த நான் பாராளுமன்றம் சென்றேன். அடுத்த தேர்தலில் காரணம் ஏதுமின்றி திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டேன்.

இச்செயல்36ஆயிரத்துக்குமேற்பட்ட வாக்குகளால் என்னை தெரிவுசெய்த தமிழ் மக்களுக்கு இவர்கள் செய்தது துரோகமில்லையா? இதுபற்றி யாராவது கேள்வி கேட்டார்களா? 2004ம் ஆண்டு தேர்தலில் முறையற்ற வகையில் 22 பாராளுமன்ற ஆசனங்களை பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்திருந்தால் அத்தனை ஆசனத்தையும் இராஜினாமா செய்திருப்போம். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இறந்தபோது அவரின் தேசியப்பட்டியல் பதவியை திருவாளர்கள் நீலன் திருச்செல்வம், சம்பந்தன் போன்றோர் விரும்பியிருந்தனர். நானே முன்னின்று அனைவரினது பகையை சம்பாதித்தேன் என்பதை உணராத திரு.சேனாதிராசாவை நியமித்தோம். அடுத்தத் தேர்தலில் நீலன் திருச்செல்வம் அவர்களின் வெற்றிடத்திற்கு அதே நபரின் தொல்லை தாங்காது அவரையே நியமித்தமை கட்சி விட்ட இரண்டாவது பிழை. அதன் பின்னர் நடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தானே முதன்மை வேட்பாளராக வரவேண்டும் என்று அடம்பிடித்து பிரச்சாரம் செய்து இரண்டாம் இடத்தையேஅவரால்பிடிக்கமுடிந்தது. அவரின் தவறான நடவடிக்கையை கண்டுகொள்ளாதது கட்சியின் தலைமை செய்த தவறு. இச்சம்பவங்கள் பற்றி பூரணமாக திரு.சம்பந்தன் போன்றோர் அறிந்திருந்தனர். இதுவரை தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளே எதுவித விசமும் பரவாமல் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு வந்தனர். துரதிஸ்டவசமாக சிறுபிள்ளைபோல் எதையும் தனக்கே தரவேண்டுமென அடம்பிடிக்கும்தமிழர் விடுதலைக்கூட்டணியின்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வன்னிக்கு சென்று 'தங்கன்' என்ற விடுதலைப்புலிகளின் கட்டளைக்கமைய இலங்கை தமிழரசு கட்சியை புனரமைப்பு செய்தார். அந்த செய்தி எத்தகைய அதிர்ச்சியை எனக்கு மட்டுமல்ல தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சிக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் கொடுத்திருக்கும் என்பதை யாராவது சிந்தித்தார்களா?

இன்றுவரை அது சம்பந்தமாக ஒரு வார்த்தையாவது எவரேனும் பிழையென தெரிவித்தார்களா? இதில் மிகப்பெரிய வேடிக்கை என்னவெனில் சாத்வீகவாதியான தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசு கட்சியை அவர் இறந்து 26 ஆண்டுகளுக்கு பின்பு எவருடைய அனுமதியின்றிபுதுப்பித்தமையே. அதுகூட அகிம்சையுடன் எதுவித உறவும் இல்லாத ஒருவரின் பணிப்புக்கமையவே. அமைதியாக இருந்த நாட்டில் இத்தனை குழப்பத்தையும் உண்டு பண்ணியவர்கள் நானா? விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகபிரதிநிதியாகவும் தமிழ் தேசியத் தலைமையாகவும் ஏற்றுக்கொண்டதாக பிரகடனப்படுத்தியே தேர்தலில் போட்டியிட்டு பலபேரை பலிகொடுத்து 22 ஸ்தானங்களை கைப்பற்றினர். இத்தேர்தல் நடத்தப்பட்டதே முற்று முழுதாக சட்ட விரோதமானதாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியே இத்தனை ஸ்தானங்களை பெற்று கொடுக்கவேண்டிய இச் சந்தர்ப்பத்தில் இந்த மோசடி அர்த்தமற்றதாகிப் போய்விட்டது மட்டுமல்ல விடுதலைப் போராட்டத்துக்கு பெரும் களங்கமும் ஏற்படுத்தியது.

இதுபற்றி இன்றுவரை யாராவது பேசினார்களா? எவருக்கும் நானே போடுதடியானேன் இன்றும்கூட.

இப்படி எத்தனை விடயங்கள் காலத்துக்குக்காலம் பலரால் மறைக்கப்பட்டது. இன்றைய அரசாங்கத்தில் 39 கட்சிகளை உள்ளடக்கியதே ஐக்கிய தேசிய கட்சியாகும். சுதந்திரக் கட்சியும் அவ்வாறே ஓரணியை உருவாக்கியது. நாம் மட்டும் மூன்று நபர்களை வைத்து அரசியல் செய்கின்றோம். தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த ஏனைய முன்று கட்சிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. உண்மையை கூறப்போனால் தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியதும் முதலாவதாக இருந்ததும் அதற்குத் தலைமை தாங்கியதும் தமிழர் விடுதலைக் கூட்டணியே ஆகும். அந்த இடத்தை வஞ்சகமான முறையில் தமிழரசு கட்சி கைப்பற்றிக் கொண்டது. நாம் மேற்கொண்ட எந்த முயற்சிகளுக்கும் எவரும் ஒத்துழைப்பு தரவில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இராணுவத் தளபதி விடுதலைப்புலிகளை பூண்டோடு அழிப்பேன் என்று சபதம் செய்து யுத்தம் முடிந்த பின் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையை இரட்டிப்பேன் என்று கூறிய இராணுவ தளபதியை ஜனாதிபதி பொது வேட்பாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரித்ததே. அவர் பெற்றுக்கொண்ட வாக்குகள் 113000. இவர்கள் பெற்ற வாக்குகள் 63000. மொத்தமான வாக்குகளின் எண்ணிக்கை ஏழரை இலட்சமாகும். எந்தவிதமான உள்நோக்கமும் இல்லாமலே நான் 2010ம் ஆண்டு திரு. சம்பந்தன் அவர்களால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இரண்டு நாள் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்குறுதியளித்துவிட்டு நான் திரும்பி வந்து மூக்குடைபட்டதுதான் மிச்சம். உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் போது தீவிரமாக தமிழர் விடுதலைக் கூட்டணி புளொட் ஆகியன தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டன. மாகாணசபைத் தேர்தலில் எனக்கு கிளிநொச்சிக்கே நியமனம் கொடுத்துவிட்டு கூட்டணி பிரமுகர்கள் இருவர் அங்கு வந்து உள்ளூர் தலைவர்களுடன் சேர்ந்து எனக்கெதிராக தீவிரப்பிரச்சாரம் செய்தார்கள். தோற்றுவிட்டேன் என நான் கவலைப்பட்டதில்லை.

இதுபற்றி எவரேனும் ஏன் விமர்சிக்கவில்லை? எம் தலைவர்களின் செயற்பாடுகள் எனக்கு வேதனையளித்தது. ஆனால் பெருந்தலைவர்கள் ஜீ.ஜீ, தந்தை செல்வா, தொண்டமான், அமிர் சிவசிதம்பரம் ஆகிய இவர்களின் இடத்தில் ஒரு உத்தமரையேனும் காணமுடியவில்லை. எனது கடந்தகால முயற்சிகள் பலமிக்க சிலரின் பின்னணியில் முறியடிக்கப்பட்டு வந்தமையால் யார் வேண்டுமானாலும் கூட்டுங்கள் என் ஒத்துழைப்பு தருகிறேன் என்று கூறினேன். இன்று அரசியலில் உத்தமர்களை அடையாளம் காண்பது கஸ்டம். எவர் எடுக்கின்ற முயற்சிக்கும் நான் முட்டுக்கட்டையாக இருக்கப்போவதில்லை.

பூரண ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறேன் என்பதில் உறுதியாயிருக்கிறேன். இந்த புதிய அணியில் இணைந்து செயற்பட விரும்பும் அனைவரையும் ஏற்க எமது கதவுகள் திறந்தே இருக்கும்.

ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை எனது மனச்சாட்சிக்கு விரோதமாக நான் என்றும் செயற்பட்டவனல்ல. கடந்தகாலத்தில் அரசியலில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டதுண்டு. தப்புகள், தவறுகள் பலவிதத்தில் நடந்திருக்கலாம். ஆனால் தமிழ் தலைவர்கள் பெரியார், தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோர் என்று தம் இருவர் உள்ளத்திலும் நிறைந்திருந்த குரோதங்களை மறந்து செயற்பட்டார்களோ அன்றே தமிழினத்தின் எதிர்காலம் பெரும் மாற்றத்தை உணரக்கூடியதாக இருந்தது. இன்றைய தலைமுறையினருக்கு தெரியாவிட்டாலும் இவ்விரு பெருந்தலைவர்களின் இணைவு உலக அதிசயத்தில் ஒன்றாக ஒப்பிடக்கூடியதாக இருந்தது. அக்காலத்தில் இவ்விருவரையும் தலைவர்களாக கொண்டவர்கள் மத்தியில் அண்ணன், தம்பி, மாமன், மச்சான், தந்தை, பிள்ளை என்ற பேதம் பாராமல் குரோதம் வளர்ந்திருந்தது. என்று இவ்விரு தலைமைகளும் திருகோணமலையில் கூடி தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்களோ அந்த நிமிடத்திலிருந்து குரோதங்களை மறந்து ஒரே குடும்ப உறவினர்கள் போல் அரசியல் குரோதத்தை மறந்து மக்களும் பழகத் தொடங்கினர்.

என்னோடு சம்பந்தப்பட்ட ஒரு சிறு நிகழ்வு எனது கருத்திற்கு ஆதாரமாக இருக்குமென கருதுகிறேன். 1970ம் ஆண்டு தேர்தலில் தமிழரசு கட்சி மிகச் செல்வாக்காக திகழ்ந்தது. அப்பேற்பட்ட ஒரு கட்சியோடு போட்டியிட்டு மிகப்பெரிய குரோதத்தைதான் வளர்க்க முடிந்தது. மிக சொற்ப வித்தியாசத்தில்தான் நான் வெற்றி பெற்றேன். ஆனால் இதிலுள்ள அதிசயம்யாதெனில்என்றுஎந்தநிமிடம் தமிழர் விடுதலைக்கூட்டணி உதயமானதோ அந்த நிமிடத்திலிருந்து நானும் ஆலாலசுந்தரம் அவர்களும் இணை பிரியாத நண்பர்களாகிவிட்டோம்.

**தொடரும்...**

# பிராந்தியச் செய்திகள்



## ஜப்பான் 38 மில்லியன் யென்களை இலங்கைக்கு உதவியாக வழங்குகிறது

சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்தலுக்கான நீர் சுத்திகரிப்பு மற்றும் முழு நாட்டுக்குமான மின்சார பரிவர்த்தனை நடவடிக்கைகள் என்பவற்றுக்காகவே இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. ஜி7 மாநாட்டுக்காக ஜப்பானுக்கு சென்றுள்ள இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது ஜப்பானிய பிரதமர் இதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் என்பன நன்மை பெறவுள்ளன.

இதேவேளை இலங்கையில் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிறுவப்படும் விவசாயத்துறைக்கான கட்டிடம் போன்றவை தொடர்பிலும் இலங்கை-ஜப்பான் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

## வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் சேவை நலன் பாராட்டுவிழா

முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் 28.05.2016 அன்று காலை 10.00 மணியளவில் வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று பிற பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களினதும் சேவை நலன்களுக்காக பாராட்டு விழா ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பாரளுமன்ற உறுப்பினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் புத்திஜீவிகள், நலன்விரும்பிகள் என பலர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மேற்படி பாடசலையில் கல்வி கற்று புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வரும் பழைய மாணவர்களின் ஒழுங்குபடுத்தலில் குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





## லிந்துலை மெராயாவில் மண்சரிவு 27 பேர் பாதிப்பு – 100 பேர் அச்சம்

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையினால் பல பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுவதாக இயற்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்க்ளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பெய்த அடை மழை காரணமாக 28.05.2016 அன்று அதிகாலை 3 மணியளவில் லிந்துலை காவற்துறை பிரிவிற்குட்பட்ட மெராயா தங்கலை கேம்பிரி மேற்பிரிவு தோட்டத்தில் மண்மேடு சரிந்து விழுந்ததில் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. குறிப்பாக பின்புறத்தில் உள்ள சமையல் அறைகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு, அதிலிருந்த பொருட்களும் சேதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.



## அட்டன் கொழும்பு பாதையில் கனரக வாகனம் செல்ல தடை

அட்டன் கொழும்பு பிரதான வீதியில் கித்துக்கல பகுதியில் பாதை தாழிறங்கியுள்ளதால் போக்குவரத்தில் தடையேற்பட்டுள்ளது. கித்துல்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடமோதர பகுதியிலே பாதை தாழிறங்கியுள்ளது.

பாதை அபிவிருத்தி அதிகாரிகள் பாதை புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள போதிலும் சிறிய வாகனங்களும் பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டிகளுக்கு மாத்திரம் போக்குவரத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் கனரக வாகனங்கள் கண்டி பேராதனை பாதையை பயன்படுத்துமாறு பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், பஸ் வண்டிகளில் செல்லும் பயணிகள் குறித்த இடத்தில் இறங்கி பாதையை கடந்த பின் பஸ்ஸில் பயணிக்கும் வகையில் போக்குவரத்து நடைபெறுவதாக கித்துல்கல பொலிஸார் தெரிவித்தனர்.

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்
மு.இ.ராமசந்திரன்



## 98 வீதமான முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைப்பு – புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம்

விடுதலைப்புலிகளுடன் இணைந்து போரில் ஈடுபட்ட 98 வீதமானவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டு, அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். பொருளாதார ரீதியாக உயரக்கூடிய வகையில் பல பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்னாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "இன்னும் சில வருடங்களில் புனர்வாழ்வு அளிக்கும் பணிகள் நிறைவடைந்துவிடும். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து போரில் ஈடுபட்ட 98 சதவீதமானவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டில் கடந்த 30 வருட காலமாகப் போர் இடம்பெற்றது. அதனால் நாம் இன்று பொருளாதார ரீதியாகப் பின் நிற்கின்றோம். போர் இடம்பெற்றிருக்காவிட்டால், எமது நாடு இன்று சிங்கப்பூர் போல் மாறியிருக்கும்.

போர் அழிவுகள் முள்ளிவாய்க்கால் வரை ஏற்பட்டது. இதற்கு காரணம் என்ன? அயல்நாடுகள் எமது நாட்டின் வளர்ச்சியைப் பொறுக்காது பிரச்சினைகளை வளர்த்து விட்டார்கள். இதனால் நாங்கள்தான் பாதிக்கப்பட்டோம். அரபு நாடுகளில் வளம் இருந்தாலும் அவர்கள் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. ஐ.எஸ். போன்ற பல தீவிரவாத அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால், எமது நாட்டில் அவ்வாறான நிலைமை இல்லை. 2009 மே மாதத்துக்குப் பின் இந்த நாட்டில் போர் முடிவடைந்து பல அபிவிருத்திகள் ஏற்பட்டு வருகின்றன. புனர்வாழ்வு பெற்றவர்களுக்கும் பொருளாதார ரீதியாக உயரக்கூடிய வகையில் பல பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டு பொருளாதார ரீதியாக எமது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என தெரிவித்துள்ளார்.



## இரண்டு மாத காலத்தினுள் சகல திட்டங்களையும் நிறைவு செய்யுமாறு டெனிஸ்வரன் பணிப்புரை

எதிர்வரும் இரண்டு மாதகாலத்தினுள் சகல திட்டங்களையும் நிறைவு செய்யுமாறு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் டெனிஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, அமைச்சரின் 2016ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்டுள்ள நிதியின் கீழ் வழங்கவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாகவே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

அபிவிருத்தி திட்டங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட அமைப்புக்கள் உடனடியாக மேற்படி வேலைத்திட்டங்களை விரைவாக இரண்டு மாத காலத்திற்குள் நிறைவுசெய்து கொடுக்குமாறும் அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

அத்தோடு இத்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தும்போது நிச்சயமாக இன்னும் பல நிதி மூலகங்களை தெரிவு செய்து இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி எமது மாகாணத்தை அபிவிருத்திப்பாதையில் கொண்டுசெல்ல முடியும் எனவும் கூறியுள்ளார்.

கடந்த கால ஒதுக்கீடுகளில் நிதி ஒதுக்கப்படாத ஏனைய தேவைகள் உள்ள அமைப்புக்களுக்கும் அடுத்த ஆண்டுகளின் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும், இவ்வாறான வேளையிலே அனைத்து மக்களும் சகல பேதங்களையும் மறந்து ஒற்றுமைப்பட்டு தமது மாகாணத்தின் அபிவிருத்தியில் செயற்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலுக்கு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈ.சுரேந்திரனாதன், அமைச்சின் பிரதம கணக்காளர் தர்மாம்பிகை அனந்தக்கிருஷ்ணன், வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

குறிப்பாக, பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்திகள் உட்பட பல வேலைத் திட்டங்களுக்கு என அமைச்சர் பா.டெனிஸ்வரன் பல மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கி வேலைத்திட்டங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## திருகோணமலையில் அனுமதிப்பத்திரமின்றி ஆற்று மண் கொண்டு சென்றவர்கள் கைது

திருகோணமலை கந்தளாய் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி ஆற்று மணலை ஏற்றிச்சென்ற இருவரை கந்தளாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று (28) இடம்பெற்றுள்ளது.

மேலும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் கந்தளாய் பிரதேசத்தைச்சேர்ந்த 24 வயது மற்றும் 30 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் கந்தளாய் சீனிபுரவிலிருந்து கந்தளாய் பகுதிக்கு உழவு இயந்திரத்தில் மணலைக்கொண்டு சென்றபோதே பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் கைது செய்யப்பட்டவர்களை இன்று (28) கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 1.4 கிலோகிராம் கொக்கெய்னுடன் நைஜீரிய பிரஜை கைது

கொழும்பு-பொரல்லை பகுதியில் 1.4 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப் பொருளுடன் நைஜீரிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நைஜீரிய பிரஜை கைது செய்யப்பட்டுள்ளதாக பொரளை பொலிஸார்கூறியுள்ளனர்.

பொரளை சர்பண்டைன் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் வைத்தே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.






## நடிகர்கள் கற்றுக்கொள்ளுங்கள்- சூர்யா



சூர்யா 24 வெற்றியால் மகிழ்ச்சியில் உள்ளார். இந்நிலையில் இவர் ஜெயராமின் மகன் காளிதாஸ் நடித்த மீன் குழம்பும் மண்பானையும் படத்தின் இசை வெளியீட்டு விழாவிற்கு சென்றுள்ளார். இப்படத்தில் நடிகர் பிரபுவும் ஒரு முக்கியமான ரோலில் நடித்துள்ளார். சூர்யா பேசுகையில் 'தற்போதுள்ள நடிகர்கள் எல்லோரும் பிரபு சாரை பார்த்து பல விஷயங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அவர் பழகும் முறை, மரியாதை கொடுக்கும் விதம் என அவரிடம் கற்றுக்கொள்ளவேண்டியது நிறைய உள்ளது' எனக் கூறியுள்ளார்.

## உடல் எடை ஏற்றியதன் விளைவு – சிம்பு வருத்தம்



சிம்பு தற்போது பழைய உற்சாகத்துடன் உள்ளார். மிகவும் பக்குவப்பட்டு ஒவ்வொரு அடியையும் நிதானமாக வைக்கின்றார். இந்நிலையில் ஒரு படத்திற்காக மிகவும் உடல் எடையை கூட்டியுள்ளார்.

ஆனால், நான் உடல் எடையை அதிகரித்தது என் ரசிகர்களுக்கு வருத்தம் தான். ஏனெனில் முன்பு போல் என்னால் வேகமாக நடனமாட முடியவில்லை. இதனால் எப்படியாவது குறைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## த்ரிஷாவிற்காக வரும் ஹரிபொட்டர் கலைஞர்கள்




தென்னிந்திய சினிமாவில் 12 வருடங்களுக்கு மேல் ஹீரோயினாக கலக்கி வருகிறார் த்ரிஷா. இவர் நடிப்பில் நாயகி படம் வரவிருக்கின்றது.

இப்படம் முடிந்த கையோடு அடுத்து மோகினி என்ற திகில் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு அதிகம் கிராபிக்ஸ் வேலைகள் உள்ளதாம். இதற்காக ஹாலிவுட் படமான ஹரிபொட்டர் படத்தில் பணியாற்றிய கலைஞர்களை இப்படத்திற்கு கமிட் செய்துள்ளார்களாம்.

## இவர்களை மட்டும் திருமணம் செய்துகொள்ளமாட்டேன்– காஜல்



காஜல் நடித்து சமீபத்தில் வந்த பல படங்கள் தோல்வி. இதனால் எப்படியாவது ஒரு ஹிட் கொடுத்து மீண்டும் தன் மார்க்கெட்டை தக்கவைக்க போராடி வருகிறார்.

இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் இவர் 'நான் காதலித்து தான் திருமணம் செய்துகொள்வேன். தற்போதைக்கு என் கவனம் முழுவதும் சினிமாவில் மட்டும் தான். ஆனால், ஒரு போதும் சினிமாவில் இருப்பவரை திருமணம் செய்துகொள்ள மாட்டேன்' என கூறியுள்ளார்.

## காதலைச் சொல்வாரா அர்ஜூன்



காதல் என்பது எந்த திரையாக இருந்தாலும் ரசிகர்கள் விரும்புவர். அந்த வகையில் பெரியதிரையைப்போல சின்னத்திரையிலும் காதல் காட்சிகள் தற்போது வரத்தொடங்கிவிட்டன. கல்யாணம் முதல் காதல் வரை தொலைக்காட்சி தொடர் ப்ரியாவுக்கு ரசிகர்கள் அதிகம். இந்த தொடரில் கடந்த சில நாட்களாக நாயகன் அர்ஜூன் பல பிரச்சினைக்கு பிறகு மனைவியிடம் காதலை சொல்ல முயன்று வழக்கமான தமிழ் சினிமா பாணியில் தள்ளிப்போகிறது. விரைவில் சொல்லிவிடுவாரா என்பதே சின்னத்திரை ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



## முருகதாஸ் படத்தில் பிரபல நடிகர்

முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க பல நடிகர்கள் வெயிட்டிங். இந்நிலையில் இவர் அடுத்து மகேஷ் பாபு நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார்.

இப்படம் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் வரவுள்ளது. இந்த படத்தில் வில்லனாக நடிக்க எஸ்.ஜே.சூர்யாவிடம் பேச்சுவார்த்தை நடந்ததாகக் கூறப்பட்டது. இதை எஸ்.ஜே.சூர்யாவே சமீபத்தில் ஒரு பேட்டியில் தான் முருகதாஸ் படத்தில் நடிப்பதாக உறுதி செய்துள்ளார்.

## நடிகை பிரியாமணி வீட்டில் விசேஷம்



தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளிலும் டொப் நாயகியாக வலம் வந்தவர் பிரியாமணி. பிரியாமணிக்கும், அவருடைய நீண்டகால நண்பரான முஸ்தப்பா ராஜ் என்பவருக்கும் திருமணம் நடைபெற இருப்பதாக தகவல்கள் வந்துகொண்டிருந்தன.

இந்நிலையில் இவர்கள் இருவருக்கும் வீட்டில் உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் சூழ நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளது. இவ்வருட இறுதியில் இருவருக்கும் திருமணம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உச்சக்கட்ட பயத்தில் 'கபாலி' ராதிகா ஆப்தே



தோனி படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் ராதிகா ஆப்தே. இவர் கபாலி படத்தில் சூப்பர் ஸ்டாருக்கு ஜோடியாக நடித்திருப்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் இவர் நடிப்பில் சமீபத்தில் போபியா என்ற படம் வந்துள்ளது, இந்தப் படம் கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட படம்.

இப்படத்தில் இவர் ஒரு வீட்டிற்குள் மாட்டிக்கொண்டு, பயந்து பயந்து வாழும் கதாபாத்திரம்,படத்தில்மட்டுமில்லைபடம் ரசிகர்களுக்கு பிடிக்குமா? என்றும் பயந்து வந்துள்ளார். ஆனால், இப்படம் ரிலிஸாகி விமர்சனங்களால்பெரிதும்பாராட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## PVP நிறுவனம் குறித்து வரும் செய்திகள் வதந்தியா?




தமிழ், தெலுங்கு என தொடர்ந்து பல படங்களை PVP நிறுவனம் தயாரித்து வருகிறது. அண்மையில் இந்நிறுவனத்துக்கு ஏற்பட்ட சில பிரச்சினைகளால் மூடப்பட இருப்பதாக செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. தற்போது இதற்கு பதில் அளிக்கும் வகையில் PVP நிறுவனம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கை பின்வருமாறு. வதந்திகளும், ஆதாரமற்ற செய்திகளும் சமூக வலைத்தளங்களில் மற்றும் ஊடகங்களில் பரவிக்கொண்டு வருகிறது.

தோல்விகளை கண்டிராத யாரும் இந்த உலகத்தில் கிடையாது. அந்த தோல்விகளை வெற்றி படிகளாக மாற்றுவதே உண்மையான வெற்றிக்கு பாதை வகுக்கும். ஏற்றங்களும், இறக்கங்களும் சமமாக இருக்கும் ஒரு துறை. சினிமா தான். அப்படி ஏற்பட்ட ஒரு சறுக்கலுக்காக பாரம்பரியமிக்க எங்கள் நிறு வனம் ஒருபோதும் துவண்டுவிடாது. பிர பல ஹீரோ மற்றும் பிரபல இயக்குனரின் கூட்டணியில் உருவாகும் ஒரு படம் எங்களின் தயாரிப்பு வரிசையில் இருப்பதை நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். அதுமட்டுமின்றி, PVP சினிமா தொடர்ந்து மக்களுக்காக தரம் வாய்ந்த படங்களை தயாரித்து வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில் உறுதியாக உள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமூக வலைத்தளத்தில் கொதித்து எழுந்த லட்சுமி



சமூகத்தில் எந்த ஒரு பிரச்சினைகளுக்கும் தைரியமாக குரல் கொடுப்பவர் லட்சுமி ராமகிருஷ்ணன். இவர் மனதில் எதுபட்டாலும் சமூக வலைத்தளத்தில் வெளிப்படையாக கூறிவிடுவார்.

இந்நிலையில் ஒரு பெண் பாலியல் பலாத்காரம்செய்யப்பட்ட விஷயம்குறித்து சமூக வலைத்தளம் மூலம் அறிந்தேன். இது உண்மையானால் இவர்கள் எல்லாம் வாழ தகுதியற்றவர்கள் என கோபமாக டுவிட் செய்துள்ளார்.

## இது சினிமா படமா வேற படமா? – பவர் ஸ்டார்



தமிழ் சினிமாவில் திடிரென பிரபலமானவர் பவர் ஸ்டார் சீனிவாசன். தனக்குத்தானே விளம்பரம் செய்து லத்திகா எனும் படத்தை 300 நாட்கள் ஓடியதாக போஸ்டர் ஒட்டி பிரபலமானார். புதுமுகங்கள் நடிக்கும் பல சிறிய பட்ஜெட் படங்களின் விளம்பரத்துக்காகவே நடித்து வருகிறார். அந்த வகையில் இவர் நடித்துள்ள கவிதாவும் கண்ணதாசனும் காதலிக்க போறாங்க (க க கா போ) எனும் படத்தின் இசைவெளியீட்டு விழா நடைபெற்றுள்ளது.

இதில் இப்படத்தின் இயக்குனர் இரவு 2 மணிக்கு அழைத்து அட்வான்ஸ் கொடுத்தார். இது என்ன சினிமா படமா இல்லை வேறு படமா என சந்தேகப்பட்டேன் என்று நகைச்சுவையாக பேசியுள்ளார்.

தென்னிந்திய சினிமாவில் தனக்கென்று ஒரு இடத்தை பிடித்தவர் தமன்னா. அதிலும் பாகுபலி படத்திற்கு பிறகு இவரின் மார்க்கெட் இந்திய அளவில் உயர்ந்துவிட்டது. இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் 'எனக்கு அனுஷ்காவின் நடிப்பு மிகவும் பிடிக்கும், ஒரு படத்திற்காக அவர் எடுக்கும் ரிஸ்க் என்னை ஆச்சரியப்படுத்தும். அவரைப்போல் என்னால் ஒரு போதும் நடிக்க முடியாது' என வெளிப்படையாக கூறியுள்ளார். தமன்னா தற்போது ஏ.எல்.விஜய் இயக்கத்தில் பிரபுதேவாவிற்கு ஜோடியாக ஒரு படத்தில் நடித்து வருகிறார்.

விஷால் எல்லோரிடத்திலும் அன்பாக பழகக்கூடியவர். அப்படியிருக்க இவருடன் விஜய் சேதுபதி ஏன் மோத வேண்டும் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. விஷால் நடித்த மருது படத்தில் முதலில் வில்லனாக நடிக்க விஜய் சேதுபதியிடம் தான் பேச்சுவார்த்தை நடந்ததாம். கோல்ஷிட் பிரச்சினை காரணமாக அவர் நடிக்க மறுத்துள்ளார்.

இதன் பிறகு இந்த கதாபாத்திரத்தில் ஆர்.கே.சுரேஷ் நடித்து மிரட்டியது அனைவரும் அறிந்ததே. இதை அவர் அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## மாபெரும் முத்தமிழ் விழா

வன்னி குறோஸ் கலாசார பேரவை பெருமையுடன் நடாத்தும் மாபெரும் முத்தமிழ் விழா 28.05.2016 மாலையில் ஆரம்பமானது. வைத்தியசாலை சந்தியிலிருந்து மாவீரன் பண்டாரவன்னியன் உருவம் தாங்கிய ஊர்தியுடன் பல்வேறு கலை பாரம்பரிய அம்சங்களுடன் ஆரம்பமாகி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானம் வரை பாரம்பரிய கலாச்சார பேரணி இடம்பெற்று மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும். முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான வைத்திய கலாநிதி கௌரவ.சி.சிவமோகன் தலைமையில் இடம்பெறுகின்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பிரபல திரைப்பட நடிகர் தென்னிந்திய நடிகர் சங்க தலைவர் மற்றும் பாரம்பரிய நாட்டுக்கூத்து கலைஞர் திரு.நாசார் அவர்களும். தென்னிந்திய குணச்சித்திர திரைப்பட நடிகர். நிகழ்நாடக மன்ற கூத்துப்பட்டடை நிறுவுனருமான திரு.மு.சண்முகராசா அவர்களும் மேலும் பல அதிதிகளும் கலந்துசிறப்பித்தனர். ஒரே மேடையில் வன்னியின் தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய கலைப்படைப்புக்களின் சங்கமம். காத்தவராஜன் சிந்து. நடைக்கூத்து. கோவலன் கூத்து. அரிச்சந்திரமயான காண்டம். பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம். சமூக நாடகம் என பல கலை அம்சங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







## கொழும்பு ரோயல் கல்லூரிக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அதிரடி விஜயம் - ஆசிரியர்களுக்கு உடனடி இடமாற்றம்

கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் கொழும்பு ரோயல் கல்லூரியின் தமிழ் பிரிவிற்கு (27.05.2016) அதிரடி விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். இதன்போது கல்லூரியின் அதிபர், தமிழ் பிரிவிற்கான பிரதி அதிபர் மற்றும் தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுடன் பாடசாலையின் குறைபாடுகள் குறித்து கலந்து உரையாடினார். இதன் போது கல்வி இராஜாங்க அமைச்சரின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவித்தான. மேலதிக செயலாளர் ஹேவகே. கல்வி அமைச்சின் தமிழ் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்வி பணிப்பாளர் எஸ்.முரளிதரன். தேசிய பாடசாலைகளுக்கான உதவி கல்வி பணிப்பாளர் இர்ஷாட். அமைச்சரின் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி ரோயல் கல்லூரியின் தமிழ் பிரிவு பெறுபேறுகளில் பின்னடைந்து வருவதற்கான காரணங்களும் அதனை அபிவிருத்தி செய்வதற்கான விடயங்களும் கலந்துரையாடலில் இனங்கானப்பட்டு அவை நிவர்த்தி செய்வதற்கு ஆசிரியர்களுக்கும். நிர்வாகத்திற்கும் ஒரு மாதகால கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் பாடசாலையில் பத்து வருடத்திற்கு மேல் தொடர்ந்து ஆசிரியர்களாக கடமையாற்றிவர்கள் சுற்று நிருபத்திற்கு அமைய உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றமும் செய்யப்படவுள்ளது. இதற்கான பணிப்பினை கல்வி இராஜாங்க அமைச்சர் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கு விடுத்தார்.

தற்போது இப்பாடசாலையில் பாட ரீதியிலான ஆசிரியர் குறைபாடுகள். சிங்கள பிரிவின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகைளில்தமிழ்பிரிவின்பெறுபேறுகள் பின்னடைவு. சில பௌதிகவள குறைபாடுகள். முகாமைத்துவத்தில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் போன்றன இனம் காணப்பட்டுள்ளது. இந்த குறைபாடுகளையும் ஒரு மாத காலத்திற்குள் நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் பிரதான பாடசாலையில் ஒன்றான இந்த பாடசாலை ஏனைய பாடசாலைகளுக்கு முன் உதாரணமாக இருக்கவேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகவலும் படங்களும்:- பா.திருஞானம்





## கொழும்பில் வசிப்பவர்களை அச்சுறுத்தும் புதிய தொல்லை

கொழும்பு புறநகர் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டதை அடுத்து தற்போது துர்நாற்றம் வீசுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலைமையானது கொழும்பின் புறநகர் பகுதிகளான கொடிகாவத்தை. முல்லேரியா,கொலன்னாவை மற்றும் வல்லம்பிட்டிய பகுதிகளில் நிலவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அசௌகரிய நிலைக்கு மாநகராட்சியிடம் இருந்து எந்த சேவைகளும் கிடைக்கப்பெறவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் கூறியுள்ளனர். கொழும்பில் இருந்து எடுத்துச்செல்லப்படும்குப்பைகள் இந்த பிரதேசங்களில் கொட்டப்படுவதே இந்நிலைக்கு காரணம் என பிரதேச மக்கள் மேலும் கூறியுள்ளனர்.

மேலும். இந்த பிரதேசத்தில் பெய்துவரும் கடும் மழையினால் ஆங்காங்கே கொட்டப்பட்டுள்ள குப்பைகள் மீண்டும் வீதியில் திரண்டு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கடும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படலாம் எனவும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## நெளுந்தெனிய பள்ளிவாசல் மீது குண்டுத்தாக்குதல்

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் அமைந்திருக்கும் நெளுந்தெனிய முஸ்லிம் பள்ளிவாசல் மீது குண்டுத்தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகாலை ஒன்றரை மணியளவில் இந்தக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. சிறிய ரக பெட்டியொன்றுக்குள் மறைத்து வைத்து குண்டுவெடிக்க வைக்கப்பட்டிருப்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான தகவல் கிடைத்தவுடன் பொலிசாரும். புலனாய்வுப் பிரிவினரும் உடனடியாக விரைந்து வந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பாக இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. மேலும் எதுவித தடயங்களும் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களை அச்சுறுத்தும் நோக்கில் அல்லது இரு இனங்களுக்கிடையிலான பதட்ட நிலையைத் தோற்றுவிக்கும் நோக்கில் இந்தக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று அனுமானிக்கப்பட்டுள்ளது.

**உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு. ஏற்கனவே நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாதே. எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் விரிந்து பரந்திருக்கிறது. உன்னுடைய ஒவ்வொரு சொல்லும். சிந்தனையும் செயலும். அதற்கு ஏற்ற பலனைத்தரும்.**

# சர்வதேச நாடுகளின் பொறிக்குள் இலங்கையரசு



யுத்தம் நிறைவடைந்து 07ஆம் வருடத்தில் காலடிவைத்துள்ள நிலையில் இன்னமும் தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண இயலாத சூழ்நிலை தொடர்கின்றது. விடுதலைப்புலிகளது போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடகிழக்கு இணைப்பும். சுயநிர்ணய உரிமையையும் த.தே.கூட்டமைப்பிடம் வழங்குவார்கள் என பல அரசியல்வாதிகளால் எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக இலங்கை அரசியலின் 60வருடங்களைப் பின்நோக்கிப் பார்ப்போமாகவிருந்தால் வெறுமனே பேச்சுவார்த்தைகளும். அதிகாரமற்ற ரீதியிலான ஒப்பந்தங்களும் செய்துகொள்ளப்பட்டதே வரலாறு. இதில் தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டே வந்தது. தமிழ் மக்களது உரிமைகள் என்னவெனப் பார்க்கின்றபோது. சுயமாக தங்களைத் தாங்களே ஆள்கின்ற ஒரு நிலை உருவாக்கப்படவேண்டும் என்பதே. இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வு விடயத்தில் ஆரம்பத்திலிருந்து இந்தியாவே இணைந்துகொண்டது. அக்காலகட்டத்தில் பொருளாதார அரசியல் இலங்கையில் இருந்தது. இப்பொருளாதார அரசியல் மேலும் விருத்தியடைய இலங்கை மீது சர்வதேச நாடுகளின் தலையீடுகள் இந்தியாவிற்கு முட்டுக்கட்டையாகவே இருந்தது. இதனை எவ்வாறு நிவர்த்தி செய்வது என உத்தேசித்த இந்தியரசு இந்திராகாந்தி. ராஜீவ்காந்தியின் ஆட்சியின் போது இலங்கையில் ஆயுதக்குழுக்களை உருவாக்கி. அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி அதன் மூலம் தமது பொருளாதாரத்தினை மேற்கொள்ள ஆரம்பித்தது. இதில் விடுதலைப்புலிகள். ரெலோ.புளொட்.ஈ.பி.ஆர்.எல்.எப்போன்ற இயக்கங்களுக்கு ஆயுதப்பயிற்சிகளையும் வழங்கியது. 1-10வரையான ஆயுதப்பயிற்சிப் பாசறைகளுக்கு தலைமையாக லெப்டினன்ட். கேணல்.பொன்னம்மான் அவர்களே செயற்பட்டார். அதன் பின்னர் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் தமிழ் இயக்கங்களுக்கும் அரசிற்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்தது.

இதனோடு தனது ஆயுத பொருளாதார ரீதியாக தம்மை வளப்படுத்திக்கொண்ட இந்தியரசு விடுதலைப்புலிகள் கடல். வான். தரை என வளர்ச்சியினைப் பெற உறுதுணையாகவிருந்தது. விடுதலைப் புலிகளின் வளர்ச்சியினைக்கண்ட இலங்கையரசு இந்தியாவிற்கும். ஆயுதக்குழுக்களுக்கும் இடையில் எவ்வாறான முறுகல் நிலையினைத் தோற்றுவிக்கலாம் எனத் திட்டம்தீட்டி முதலில் ஆயுதக்குழுக்களிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தியது. இதன் காரணமாக இந்தியரசு இலங்கையில் காலடி எடுத்துவைக்கவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கேற்ப இந்தியரசு செயற்படாததன் விளைவாக இந்திய அரசின் 1987ன் இலங்கை வருகையின் பின்னர் அப்போது பிரதமராகவிருந்த ராஜீவ்காந்தி விடுதலைப்புலிகளால் கொலை செய்யப்பட்டார். இக்காரணத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இலங்கையின் அப்போதைய பிரதமர் பிரேமதாசா அவர்கள் இந்திய அரசிற்கும். விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்த சூழ்நிலைகளைத் தோற்றுவித்தார். விடுதலைப்புலிகளின் ஊடாக இந்திய அரசினை வெளியேற்றும் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். இதன் காரணமாக விடுதலைப்புலிகளுடைய போராட்டத்தை மழுங்கடிக்கும் செயற்பாடுகளையே இந்தியரசு மேற்கொண்டது. அதன் பின்னர் சந்திரிக்கா அம்மையார். மஹிந்த ராஜபக்ஷ உட்பட தற்போதைய அரசையும் தமக்குச் சாதகமாகவே இந்தியரசு பயன்படுத்திக்கொண்டுள்ளது. அதனது தொடர்ச்சியே தற்போது இடம்பெறுகிறது. யுத்த முடிவிற்குப் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவினது அரசாட்சி தமிழ் மக்களுக்குப் பெரும் துரோகத்தனத்தை விளைவித்ததன் காரணமாக இலங்கைத் தீவில் பல நாடுகள் தமது மனிதநேய உணர்வுகளோடு செயற்படவேண்டும் என்று கூறிக்கொண்டு தமது சுயலாப அரசியலுக்காக இலங்கையுடன் நட்புறவினை ஏற்படுத்திக்கொண்டனர்.

45 நாடுகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தனர். சீனா. அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடுகள் இலங்கையில் அதிகமாகக் காணப்பட்டதன் விளைவாக மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும் என்கிற சதித்திட்டம் இந்திய அரசின் உதவியுடன் ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் செயற்படுத்தப்பட்டது. அதுவே இன்று இலங்கையில் நடைபெறும் மைத்திரி-ரணில் இணைந்த கூட்டாட்சியாகும்.

சர்வதேச நாடுகளின் பொறிமுறை என்பது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை அடக்கி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதலேயாகும். இன்று சர்வதேசத்தில் இருக்கக்கூடிய 38பயங்கரவாத நாடுகளிலும் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. குறிப்பாக அமெரிக்கா. சீனா. இந்தியா ஆகிய இந்த மூன்று நாடுகளும் இலங்கையுடனான நட்புறவினை ஆரம்பத்திலிருந்தே பேணி வருகின்றன. இந்நாடுகளுக்கிடையில் போட்டித்தன்மையும் காணப்படுகின்றது. சீன அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட பல்வேறான அபிவிருத்திகள் இலங்கையில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில். பெற்ற கடனிலிருந்து மீட்சிபெற முடியாத நிலையில் மீண்டும் அந்நாடுகளுடனான ஒப்பந்தங்களை இலங்கை அரசு ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இது பொருளாதார ரீதியிலான ஒரு பொறிமுறையாகும். இதனைக்கொண்டே ஒரு நாடு தமது கட்டுப்பாட்டின் கீழ் செயற்படாதுபோனால் சர்வதேச ரீதியில் பொருளாதாரத் தடையினை விதிப்பார்கள். நாடுகளுக்கிடையிலான போக்குவரத்து. பணப்புழக்கம். இவ்வாறான பிரச்சினைகளை உருவாக்கும் போது அந்நாடு இவற்றிலிருந்து தப்பிக்கொல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும். அபிவிருத்தியடைந்த நாடுகள் இவ்வாறே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மீது தம் அதிகாரத்தை மறைமுகமாகத் திணிப்பது வழக்கம்.

குறிப்பாக ஈரான். ஈராக். சிரியா. பாலஸ்தீன் போன்ற நாடுகள் எண்ணை வளத்தினால் தம்மை வளர்ச்சிப்படுத்திக்கொண்டிருக்க அதனைப் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாத அமெரிக்கா. அந்நாடுகள் மீது பயங்கரவாதம் என்ற போர்வையில் அண்மைக்காலமாக யுத்தத்தினை ஆரம்பித்துள்ளது. தமக்கு இன்னல்களைக் கொடுத்துக்கொண்டிருப்பவர்களாகக் கருதப்பட்ட ஒசாமா பின்லேடன். கடாபி. சதாம் ஹூசைன் போன்றவர்களைக் கொலை செய்தது. அதன் பின்னர் அந்நாடுகளில் வன்முறைகள் தோற்றுவிக்கப்பட்டது. இன்றும் அது தொடர்கின்றது.

மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள் எனக்கூறிக்கொண்டு வழங்கப்படவேண்டிய அதிகாரங்களை புறக்கணிப்பது என்பது இலங்கை அரசினது ஒரு இராஜதந்திர நகர்வே எனப் பலரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இது சர்வதேச நாடுகளது கட்டளையாகும். இவ்வாறே இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும். அரசிற்கும் இடையில் சமாதானப்பேச்சுக்கள் எனக்கூறி அவர்களிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்பட்டது. இதற்கிடையில் விடுதலைப்புலிகளது பலம். பலவீனத்தைக் கண்டறிந்த சர்வதேசம் அவர்களை முற்றாக அழித்தொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதுவும் சர்வதேச போர்ப்பொறிமுறைகளில் ஒன்று. தற்போது சர்வதேச பொறிமுறைக்குள் யார் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் எனில் அது இலங்கை வாழ் மக்களே.

ஆகவே சர்வதேச நாடுகளது தலையீடுகள் எப்போது இலங்கையில் இல்லாமல்போகுமோ அன்றுதான் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் நிரந்தரமாகக் கிடைக்கும். நோர்வே சமாதான தூதுவராக செயற்பட்டுவந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் திட்டங்களை பலவீனப்படுத்துவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அந்நேரம் இலங்கை அரசுடன் நண்பர்களாக மறைமுகமாகச் செயற்பட்டனர். கடமை. கண்ணியம். கட்டுப்பாடு எனச் செயற்பட்ட விடுதலைப்புலிகளை சமூகமயமாக்கி சுதந்திரமாக செயற்பட அனுமதித்ததன் விளைவு அவர்களது போராட்டத்தை சிதைக்கும் வண்ணமாக அமைந்திருந்தது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் எனக்கூறிக்கொண்டிருக்கும் சர்வதேசம் மெக்ஸ்வெல் பரணகமவினது போர்க்குற்ற விசாரணை அறிக்கை. இனப்படுகொலை. சமஷ்டி முறையிலான விடயங்களை முன்னெடுத்து வருகின்றது. இவை ஒரு நல்லாட்சிக்கான முன்னகர்வுகள் என்பதனை வெளியுலகிற்குக் காட்டிக்கொண்டு புதிய பொறிமுறைகளை இலங்கை மீது திணித்துள்ளது. அதில் மிக முக்கியமானவொன்றுதான் பொருளாதாரம். இதனைக்கொண்டே இலங்கையின் அரசியலை கடந்த காலத்தில் அசைத்தது. இன்றும் அசைத்துக்கொண்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ பிற நாடுகளிடமிருந்து பெற்ற கடனைச் செலுத்திமுடிப்பதா? அல்லது தற்போது நாட்டில் அபிவிருத்திகளை மேற்கொள்வதா? என்ற நிலையில் இலங்கையை சர்வதேசம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது என்பதுதான் உண்மை.

காலத்திற்குக்காலம் அரசியல் நிலைமைகள் மாற்றம்பெற்றிருக்கின்றது. இலங்கை தாமாக சுதந்திரமாகச் செயற்படுவதை சர்வதேச நாடுகள் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. இலங்கை மீது இந்தியா ஆதரவாகச் செயற்பட்டால் அதற்கு எதிராகச் சீனா செயற்படுகிறது. சீனா ஆதரவாகச் செயற்பட்டால் இந்தியா எதிராகச் செயற்படுகிறது. அமெரிக்கா ஆதரவாகச் செயற்பட்டால் சீனாவும். இந்தியாவும் எதிராகச் செயற்படுகின்றன. இதுவே தொடர்ந்துவரும் அரசியலில் நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. ரஷ்யா. கனடா. சுவிஸ் போன்ற நாடுகள் இலங்கையில் தமது அரசியல் ரீதியான நகர்வுகளை மேற்கொண்டு வந்துள்ளன. எனினும் அவர்கள் தமது ஆதிக்கத்தை இலங்கை மீது செலுத்தவில்லை. தமது ஆதிக்கத்தைச் செலுத்தும் நாடுகளாக அமெரிக்கா. இந்தியா. சீனா போன்ற நாடுகளே செயற்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவினது காலத்தில் சீனாவின் போர்க்கப்பல்கள் தங்குதடையின்றி கொழும்பிற்கு வந்துசென்றதே இந்தியரசிற்கு பெரும் சர்ச்சையாக உருமாறியது. இந்தியா இதனால் பலமுறை இலங்கையை எச்சரித்தது. ஆகவே மஹிந்தவை சீனாவிடமிருந்து பிரிக்கவும். அவரை ஆட்சியிலிருந்து ஓரங்கட்டவும் இந்தியா மேற்கொண்ட முயற்சியானது சர்வதேசப் பொறிமுறைக்கும் சாதகமாக அமையப்பெற்றது.

சர்வதேச போர்பொறிமுறையில் இருந்து இலங்கை தப்பிக்கொள்ள மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள். சர்வதேச நாடுகளின் தலையீடின்றி செயற்பட்டுக்கொண்டிருக்கும் நாடுகள். அதன் வளர்ச்சி குறித்து விரிவாக ஆராயவேண்டிய தேவைக்குள் நாம் இருக்கின்றோம். தமிழ் மக்களுக்கான தீர்வுகள் கிடைக்கவேண்டுமாகவிருந்தால் சர்வதேச போர்பொறிமுறையை இலங்கையில் இருந்து அப்புறப்படுத்துவதற்காக நாம் என்ன செய்யவேண்டும்.

தொடரும்...

– மறவன் –

## நல்வாழ்விற்கான நற்சிந்தனைகள்

நம்பிக்கைநிறைந்தஒருவர்யார்முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை. பிரச்சினையை சகித்துக்கொள்ளாமல், எதிர்கொண்டு சமாளியுங்கள்.

வெற்றிக்கும், தோல்விக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நிர்ணயிப்பதுதான் பிரச்சினை. வாட்டி வதைத்தாலும் கடுமையாக பாடுபட்டால்தான் பிரச்சினைகளோடு மல்லுக்கு நின்று தீர்வு காணமுடியும்.

காலத்தின் மணல் பரப்பில் உன் கால்சுவடுகளைப் பதிக்க விரும்பினால் உன் கால்களை இழுத்து இழுத்து நடக்காதே!

கற்றலின் ஒரு அங்கமாக தவறுகளை அனுமதிக்கவேண்டும். தவறே செய்யக் கூடாது என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. துணிச்சலான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுதான் முக்கியம்.

தனது இலக்கைக் குறிவைத்து தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு சின்னப்புள்ளியும் பெரும் புள்ளிதான். எனவே சளைக்காமல் முயற்சித்து கொண்டிருங்கள்.

வெட்டித்தனமாக இருப்பதிலும் சில்லரைத்தனமான விஷயங்களிலும் மனதை அலைபாய விடக்கூடாது என்பதில் விடாப்பிடியாக இரு! அதிகமான உணர்வதில், ஏராளமாகக் கற்றுக் கொள்வதில், நிறைய வெளிப்படுத்துவதில் ஆசை கொண்டிரு.

நீண்டநாள் முழுவதும் கணத்திற்கு கணம், நேர்மையாய், துணிவாய், உண்மையாய், உழைக்கிறவன் கரங்களே அழகிய கரங்கள்.

வெற்றிபெறவேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி. அலட்டிக்கொள்ளாமல் இருக்கும் போது அபாரமான செயற்பாட்டிற்குப் பலன் கிடைக்கும்! விஷயங்கள் எப்படி வருகின்றனவோ அதை அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டும்.

தங்களுடைய தொழிலில் சிகரத்தை எட்ட விரும்புகிறவர்களுக்குத் தேவையான அடிப்படைத்தகுதி முழுமையான பொறுப்புணர்வு. தன்னால் முடிந்த மட்டும் தனது சக்தி முழுவதையும் பயன்படுத்திப் பாடுபடும் ஆசை வந்துவிட்ட ஒருவரிடம் வேறு எந்த ஆசைக்கும் இடமிருக்காது.

நமது ஆரோக்கியத்திற்கு கஷ்டங்கள் அவசியம் தேவை! நமது உடலுக்குள்ளேயே நல்லவிதமான உணர்வுபூர்வ சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ளாவிட்டால் வெற்றியடைந்த பிறகு அதை அனுபவித்து மகிழ்ச்சியடைய முடியாமல் போய்விடும் என்பதை நாம் உணர வேண்டும்.

வெற்றிகரமான சாதனைகளுக்கு நான்கு அடிப்படை அம்சங்கள் அவசியம். அவை இலக்கு, நிர்ணயம், ஆக்கபூர்வமான சிந்தனை, கற்பனைக் கண்ணோட்டம், நம்பிக்கை என நான்காகும்.

தேவையான அளவிற்கு சுதந்திரமாகச் செயற்படும் உரிமையும் அதிகாரமும் உடைய ஒரு தலைவரால்தான் தமது அணியை வழிநடத்திச் செல்லும் பொறுப்பையும் வெற்றிகரமாக நிறைவேற்ற இயலும்.

வேலை நாட்களில் அன்றாட கூச்சல், குழப்பம் சந்தடியெல்லாம் அடங்கியதும் ஆற, அமர சிந்தித்து அடுத்து வரப்போகும் புத்தம் புது நாளை எதிர்கொள்வதற்கு உன்னை நீ செம்மையாகத் தயார் செய்து கொண்டால் எதிர்காலத்தில் நீ வெற்றிகரமான தலைவர்தான்.

எந்த அளவிற்கு உங்களுடைய அறிவுத்திறனால் தற்போதைய நிலவரம் வரைத் தெரிந்து வைத்து இருக்கிறீர்களோ அந்த அளவிற்குத்தான் நீங்கள் சுதந்திர மனிதர். கால எல்லையைத் தவிர வேறு எந்த விதத்திலும் ஒருவரின் அறிவாற்றலை அபகரிக்க இயலாது.

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

அத்துடன் அம்மக்கள் வேறு ஒரு நாட்டில் இருந்து சேவகம் செய்வதற்காக இங்கு குடியேற்றப்பட்டவர்கள். அவர்களது சமூக கட்டமைப்பு, அவர்களது தேவைகள் அனைத்தும் தனித்துவமானவை. எனவே அவர்களால் சமஸ்டியை கோரமுடியாது.

தனித்து ஒரு அலகை பெற வாய்ப்பில்லை. மக்களோடு மக்களாக கொஞ்சம் பிரத்தியேகமான தமது அபிவிருத்திக்குரிய அரசியல் உரிமைகள் சிலவற்றையே கோர முடியும். போட்டி தன்மை உள்ள பிரதேசவாதம் சமஸ்டியின் உறுதியற்ற தன்மையை அதிகரிக்க செய்யும். சமஸ்டி பிரிந்து போதலை ஊக்குவிக்கிறதா ? என்ற கேள்வியை தொடுக்கும் போது இரு விதமான பதில்களை பெறமுடியும். ஆனால் சமஸ்டி பிரிந்து போதலையே அதிகமாக ஊக்குவிக்கின்றது என்பதே பெரும்பான்மை சமூக விஞ்ஞானத்தின் முடிவாகும்.

எனவே நீண்டகால இனமுறுகளால் பதிக்கப்பட்ட சமூகத்துக்கு சமஸ்டி முறையிலான தீர்வை வழங்க ஒடுக்குமுறையாளர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். அது மீண்டும் ஒரு தனி நாட்டுக் கோரிக்கைகளைவலுபெறசெய்யும்என்பதே ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பாகும். சமஸ்டி ஆட்சி நீடித்து நிலைபெறும் என சொல்ல முடியாது. இனகுழுமங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் நாட்டில் பேராபத்தை கொண்டு வந்துவிடும் என்பது ஆட்சியாளர்களின் எச்சரிக்கையாகும்.

இலங்கை அரசு தமிழருக்கு என்று சில விசேட அதிகாரங்களை பகிர்வதோடு தனது புதிய அரசியல் யாப்பை நிறுத்திக்கொள்ளும். குறிப்பாக இன்றைய 13ம் திருத்தம் போல இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். இதனை விடுத்து சமஸ்டியை பெற்றுவிடலாம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்போ அல்லது தமிழ் மக்களோ நினைத்தால் அது எதிர்காலத்தில் ஏமாற்றமாகவே இருக்கும். இன்று தமிழர்கள் அனைத்தையும் இழந்துவிட்டனர். பேரம் பேசும் வாய்ப்புகள் எவையும் இல்லை. அந்த எதிர்கால ஏமாற்றங்களை இன்று தவிர்க்கப் பழகிக்கொண்டால் எதிர்கால வாழ்வு இலங்கையில் உள்ள இனங்களை ஐக்கியப்படுத்தும். தமிழீழமும் சமஸ்டியும் ஆட்சியாளர்களை பொறுத்தவரை ஒன்றுதான் என்பதே அவர்களின் நிலைப்பாடு. மாறாக தமிழர்களுக்கு தீர்வு சமஸ்டி தான் எனும் மாயையை தமிழ் தலைமைகள் தோற்றுவித்தால் ஏனைய சமூகங்களும் தமிழர்களை ஒதுக்க வேண்டிய நிலையே ஏற்படும். அது மீண்டும் இலங்கையில் பல்லின சமூகங்களுக்கு இடையே அச்சத்தையும், எதிர்கால இருப்பையும் கேள்விக்குறியாக்கி விடும் என்பதே உண்மை.



உலர் திராட்சையின் அபூர்வ நன்மைகள்

திராட்சை மது வகை தயாரிக்கத்தான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அதில் உள்ள அபூர்வமான மருத்துவ சக்தி பலரும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

திராட்சையில் கறுப்பு திராட்சை, பச்சை திராட்சை, பன்னீர் திராட்சை, காஷ்மீர் திராட்சை, ஆங்கூர் திராட்சை, காபூல் திராட்சை, விதையில்லா திராட்சை என பல வகையுண்டு.

இதில் எந்த திராட்சையாக இருந்தாலும் நோய்களை குணப்படுத்தும் சக்தி இதற்கு உண்டு. குறிப்பாக, அல்சர் என்ற குடல்புண் நோய்க்கு, திராட்சை அற்புதமான மருந்தாகும்.

காலையில் திராட்சைப்பழச்சாறு குடித்து வந்தால், வேறு எந்த மருத்துவ சிகிச்சைக்கும் கட்டுப்படாத வயிற்றுப்புண் முழுமையாக குணமாகும். இதேபோல், தலைச்சுற்றல், மலச்சிக்கல், கை-கால் எரிச்சல் உள்ளவர்களும் திராட்சையை பழமாகவோ, ஜூஸ் ஆகவோ சாப்பிடலாம்.

பல்வேறு நோய்கள் வர காரணமாக உள்ள, மலச்சிக்கலை சரிசெய்ய, திராட்சை நல்ல மருந்தாகும். மலச்சிக்கல் உள்ளவர்கள், உலர் திராட்சையை இரவு உறங்கும் முன் ஒரு கைப்பிடி அளவு சாப்பிட்டால், மறுநாள் காலை அதன் பலன் தெரியும்.

இதே பிரச்சினை குழந்தைகளுக்கு இருந்தால், சிறிதளவு தண்ணீரில் உலர் திராட்சையை இரவில் ஊறப்போட்டு, காலையில் கண்விழித்ததும் உலர் திராட்சையை நசுக்கி, அதன் சாற்றை மட்டும் குடிக்க கொடுத்தாலே பிரச்சினை சரியாகிவிடும்.

கர்ப்பிணிகளுக்கு வாய் குமட்டல், வாந்தி, வாய்க்கசப்பு இருக்கும். அந்த மாதிரி நேரங்களில் திராட்சை சாப்பிட்டால் பலன் கிடைக்கும். எடை குறைவாக இருக்கிறவர்கள், உடம்பில் சூடு அதிகம் உள்ளவர்களும் திராட்சையை சாப்பிடலாம்.

உலர்ந்த திராட்சையில் விட்டமின் பி மற்றும் சுண்ணாம்புச்சத்து அதிகம் உள்ளன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, அனைவருக்கும் உகந்தது. எலும்பு மஜ்ஜைகளிலிருந்து, ரத்தம் ஊறுவதற்கு, காய்ந்த திராட்சை உதவுகிறது.

இப்பழத்தை எடுத்து வாயில் போட்டு, கொஞ்சம் கொஞ்சமாக சாறு இறக்கினால் எலும்பு மஜ்ஜைகள் பலமடைந்து ரத்தம் அதிகம் சுரக்கும். ரத்தத்தை சுத்தப்படுத்தி, உடலுக்கு புத்துணர்வைக் கொடுக்கும்.

கர்ப்பிணிகளின் கருவில் வளரும் குழந்தைக்கு தேவையான, அனைத்து சத்துக்களும்தாயின் மூலம் தான் கிடைக்கும். மாதவிலக்கு காலங்களில் சில பெண்களுக்கு வயிற்றில் வலி இருந்து கொண்டே இருக்கும். இப்பிரச்சினை தீர, கைகொடுக்கும் மருந்தாக உலர்ந்த திராட்சை பயன்படுகிறது.

இப்பழத்தை நீரில் போட்டு காய்ச்சி, கஷா யமாக சாப்பிட்டால் வலி மறைந்து போகும். உலர்ந்த திராட்சையை அப்படியே பயன்படுத்தக்கூடாது. அதனை நன்றாக கழுவிவிட்டு அல்லது தண்ணீரில் சிறிது நேரம் ஊறவிட்டு, பின்னர் நன்கு கைகளால் பிசைந்து கழுவிய பின்தான், குழந்தைகளுக்கு கொடுக்கவேண்டும்.

## 1956–2009வரை சிங்கள இனத்தால் திட்டமிட்டுச்செய்யப்பட்ட தமிழினப் படுகொலைகள்

கடந்தவாரத் தொடர்ச்சி...

1976 மே 14 தமிழர் கட்சிகள் ஒன்றிணைந்து வட்டுக்கோட்டையில் மாநாடுநடத்தியதில் இனி தனித்தமிழ் ஈழமே தீர்வு என தீர்மானம் நிறைவேற்றினர்.

1977 பாராளுமன்றத்தில் தேர்தலில் இத்தீர்மானத்தை முன்வைத்து போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு 90% தமிழ் மக்கள் ஆதரவளித்து 18 இடங்களில் வெற்றி பெறச் செய்தனர்.

பேரா. நாம் சாம்ஸ்கி,
(மொழியியல் மற்றும் தத்துவவியல் மஸ்சாசுசெட் பல்கலைக்கழகம், போஸ்டன், அமெரிக்கா) இலங்கையில் நடப்பது வேறுபட்ட அளவில் ருவாண்டா வன்முறைகளுக்கு ஒப்பானது. ஆனால் இதை மேற்குலகம் பொருட்படுத்தவில்லை.

பேரா. பாயில்,
(சர்வதேச சட்டத்துறை இல்லினாஸ் பல்கலைக்கழகம், அமெரிக்கா) வன்னியில் இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இன அழிப்பு படுகொலையானது ஒப்பீட்டளவில் செர்போனிக்காவில் செர்பியாவால் நடத்தப்பட்ட போஸ்னியர் இன அழிப்பு படுகொலையைப் போன்று நான்கு மடங்கு பெரியது.

அருந்ததி ராய்
(எழுத்தாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர். புக்கர் பரிசு பெற்றவர், இந்தியா) பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற நிறைமறைவிற்கு பின்னே தமிழர்கள் மீது ஒரு இனவாதத்போர் நடந்து கொண்டிருக்கிறது. இவ்வினப் படுகொலையைத்தடுக்க உலக நாடுகள் உடனே முன்வரவேண்டும்.

கரன் பாக்கர். J.D - சிறப்பு பிரதிநிதி
(சர்வதேச கல்வி வளர்ச்சி-மனித உரிமைச்செயற்பாடு, அமெரிக்கா) தமிழர்கள் சட்டபடியான அரசினைப் பெற்றிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். அவர்கள் சுயநிர்ணய உரிமையை கொண்டுள்ளார்கள். தமிழர் பகுதிகள் அத்தகைய உரிமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது பகுதிகளிலேயே வாழ்ந்து கொண்டு தங்களுக்கான பொது நிர்வாகத்தையும் கொண்டுள்ளனர். ஆகவே இது சட்டப்படியான அரசு. (இலங்கை) அரசாங்கத்தின் கீழும் தமிழ் மக்கள் தங்களது பகுதிக்கு சட்டப்படியான உரிமை கொண்டிருந்த போதிலும் அவர்கள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இல்லை.

புருஸ் பேரியின்,
(அமெரிக்க முன்னாள் இணை சட்டத்தரணி, அமெரிக்கா) எவ்வித குற்றச்சாட்டுமின்றி இலங்கை அரசு, நீங்கள் சொல்லிக்கொள்வதைப் போல தமிழர்களை முதல்தர குடிமக்களாக நடத்துமானால், தமிழர்களிடையே தனி நாடாகப் பிரிந்து போக விருப்பமா அல்லது இணைந்தே இருக்க விரும்புகிறார்களா என ஒரு பொது வாக்கெடுப்பை ஏன் நடத்தக்கூடாது? கனடா கியூபெக்கிலும், அமெரிக்க பியூடோரிகோவிலும், செர்பியா மாண்டினிக்கோவிலும் அத்தகைய சுதந்திரத்திற்கான பொது வாக்கெடுப்பை அனுமதித்தன. கனடா, அமெரிக்கா, செர்பியா போன்ற நாடுகள் ஏன் இலங்கைக்கு ஓர் சிறந்த முன்னுதாரணமாக விளங்கக்கூடாது? அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதருக்கு அனுப்பிய

கடிதத்திலிருந்து...

படாக்டர். ராகேல் ஜாயிஸ் - கன்சர்வேடிவ் கட்சி, பிரிட்டன்.
தற்போது இலங்கை என்று அழைக்கப்படுகின்ற தீவில் தமிழ் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக தங்களுக்கான தனித்த நிலப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்களது வரலாற்றுப் பூர்வமான நிலப்பகுதிக்கு மட்டுமே உரிமை கொண்டாடுகின்றனர். காலனிய ஆதிக்கம், குறிப்பாக பிரிட்டன் ஆக்கிரமிப்பதற்கு முன் அங்கிருந்த 30 லட்சம் தமிழர்கள் தங்களுக்கென தனி அரசுகளைக் கொண்டிருந்தனர். அவ்வரசுகள் எல்லாம் காலனிய ஆட்சியில் நிர்வாக வசதிக்காக மட்டுமே சிங்கள அரசுகளுடன் இணைக்கப்பட்டன. இலங்கையின் விடுதலை முதல் ஏற்பட்டு வரும் பிரச்சினைகளுக்கெல்லாம் இப்பிழையே காரணமாக உள்ளது.

லீ குவான் யே,
(சிங்கப்பூர் பிரதமர், 1959 முதல் 1990 வரை)
நான் அவரது (ராஜபக்ஷ) பேச்சுக்களைப் படித்துப்பார்த்தேன். அவர் ஒரு சிங்கள பயங்கரவாதி என்பது எனக்குத் தெரியும். அவரது, சொந்த இனமோக எண்ணத்தை என்னால் மாற்ற இயலாது.



# அறிவியல் உலகம்



## மொபைல் சாதனங்களுக்கான புதிய இணைய உலாவி



ஸ்மார்ட் கைப்பேசிகளில் இணைய உலாவிகள் அத்தியாவசியமான மென்பொருளாக மாறி நீண்ட நாட்களாகிவிட்டன. தற்போது கூகுள் குரோம், மொஸில்லா ஃபயர் பொக்ஸ் என்பன மொபைல் சாதனங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது Gello எனும் புத்தம் புதிய இணைய உலாவி ஒன்று விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. Gello உலாவியானது கடந்த வருடமே வடிவமைக்கப்பட்டு அதன் சோதனைப் பதிப்பு அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒரிஜினல் பதிப்பானது ஒரு வருடங்களுக்கு பின்னர் அறிமுகம் செய்யப்படவுள்ளது. எது எவ்வாறெனினும் இந்த உலாவில் பாரிய குறைபாடு ஒன்று உள்ளது. அதாவது Cyanogen Mod 13 இயங்குதளத்தில் மட்டுமே நிறுவிப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

இவ் இயங்குதளத்தில் வெற்றிகரமான முறையில் செயற்படக்கூடியதாக இருந்து பயனர்களை கவர்ந்தால் ஏனைய இயங்குதளங்களில் செயற்படும் கைப்பேசிகளிலும் எதிர்காலத்தில் Gello இணைய உலாவி தவழும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## ஹேம் பிரியர்களை இணைக்கும் யூடியூப்பின் புதிய சேவை



யூடியூப் நிறுவனம் வீடியோக்களை பகிர்ந்து மகிழும் சேவையை வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே. இது தவிர முப்பரிமாண வீடியோக்கள், நேரடி நிகழ்ச்சிகளை 360 டிகிரியில் கண்டு மகிழ்தல் போன்ற சேவைகளையும் வழங்கி வருகின்றது. தற்போது இவற்றையெல்லாம் தாண்டி ஹேம் பிரியர்களுக்காக புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது. இதன்படி உலகெங்கிலும் உள்ள ஹேம் பிரியர்கள் யூடியூப்பில் இணைந்து நேரடியாக ஹேம் விளையாடி மகிழ முடியும். இது தவிர பல்வேறு நிகழ்ச்சிகளையும் ஒன்லைன் ஊடாக தெரியப்படுத்தக்கூடிய வசதியும் தரப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ள இவ் வசதியின் ஊடாக E3 2016 நிகழ்வும் காண்பிக்கப்படவுள்ளது. இச்சேவையினை https://gaming.youtube.com/e3 எனும் இணையத்தள முகவரியின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

## சாத்தியமாகிறது புதிய வகை ஹோவர் பேருந்து



சீனாவில் புதிய வகை ஹோவர் பேருந்தை அடுத்த ஆண்டு பரிட்சார்த்த முறையில் செயற்படுத்த உள்ளனர். இனி வாகன நெரிசல் அறவே இருக்காது என இதன் வடிவமைப்பாளர்கள் அறுதியிட்டு கூறுகின்றனர். காரணம் இந்த ஹோவர் பேருந்தில் ஒரே நேரம் 1200 பயணிகள் வரை பயணிக்கலாம். மட்டுமன்றி, இந்த ஹோவர் பேருந்தின் வித்தியாசமான வடிவமைப்பால் சாலைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களின் மீதே இது பயணிக்கிறது.

இதனால் சொந்த வாகனங்களில் பயணிப்பவர்களுக்கு நெரிசல் ஏற்பட்டு இடையூறு உண்டாகும் என்ற அச்சம் தேவை இல்லை. சீனாவின் கொடிய வாகன நெரிசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அங்குள்ள ஒரு நிறுவனம் இந்த ஹோவர் பேருந்து திட்டத்தை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளது. ஹோவர் பேருந்துக்கான வழித்தடங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை அடுத்த ஓராண்டுக்குள் முடித்து திட்டத்தை செயல் வடிவம் கொண்டுவர அதிகாரிகள் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டு இறுதிக்கு முன்பாக சீனாவின் குயின்/ஹவான்ஹடோ நகரில் ஹோவர் பேருந்து சேவையை வெள்ளோட்டம் விடவும் இதன் நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்.

## தொழில்நுட்பத்தின் மற்றுமொரு வரப்பிரசாதம்




மனித வாழ்வில் பயன்படுத்தப் படுவதற்கென தற்காலத்தில் கண்டு பிடிக்கப்படும் அனேகமான பொருட்கள் நீண்டகாலம் நிலைப்பதில்லை. அவற்றுள் சில குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பாவனைக்கு உதவாமல் போனதும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும். ஆனால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொருள் (Material) ஒன்று இவற்றையெல்லாம் தாண்டி நீடித்து நிலைக்கக்கூடியதாக இருக்கின்றது.

இதனை Qing Wang எனும் பேராசிரியரின் தலைமையின் கீழ் இயங்கிய ஆராய்ச்சி குழு உருவாக்கியுள்ளது. இது Self-Healing Material என அழைக்கப்படுகின்றது. இப் பொருளானது பாதியாக சிதைவடைந்த பின்னரும் தானாகவே தன்னைப் பழுதுபார்த்து மீள் புதுப்பித்தலுக்கு உள்ளாகக்கூடிய சிறப்பியல்பினை கொண்டுள்ளது. நானோ தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த பொருள் மீள்தன்மை உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலவில் தெரியும் மர்ம கோபுரங்கள்



நிலவின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் மர்ம கோபுரங்கள் அமைந்துள்ளது போன்ற காட்சிகள் வெளியானதை அடுத்து வேற்றுக் கிரகவாசிகளின் ஆக்கிரமிப்பா என சர்ச்சை எழுந்துள்ளது. வேற்று கிரகவாசிகள் குறித்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வரும் குழு ஒன்று நிலவின் விளிம்பு பகுதியை ஆராய்ந்து வந்துள்ளது. அப்போது அங்கு 200 அடி உயரம் கொண்ட 5 கோபுரங்கள் இருப்பதை அதிர்ச்சியுடன் ஆராய்ந்துள்ளனர். இதுகுறித்துப் பேசிய அந்தக் குழுவினர், இதுவரை எவரும் நிலவில் இதுபோன்ற கோபுரங்கள் அமைத்து பயன்படுத்தி வருவதை நீங்கள் நம்பவில்லை என்றால், உங்களுக்கு போதிய தகவல்களை எவரும் இதுவரை அளிக்கவில்லை என்றே கருதப்படும் என்றனர். இதற்கு முன்னர் நாசா அமைப்பு வெளியிட்ட புகைப்படங்களை விடவும் இந்தக் காட்சிகள் தெளிவற்றவையாக இருப்பினும் கோபுரங்கள் இருப்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதுவரையான ஆராய்ச்சி முடிவுகளில், விண்வெளி ஆய்வு மையம், விண்வெளி மற்றும் வானியல் நிபுணர்கள் என பெரும்பாலானோர் அங்கிருக்கும் வட்ட வடிவமான அல்லது செவ்வகத்தை ஒத்த வடிவம் கொண்ட பாறைகள், வேற்று கிரகவாசிகளின் இருப்பிடமாக நிலா இருப்பதை உறுதி செய்துள்ளனர். மேலும், இதுபோன்ற தகவல்களை வெளிவராமல் தடுப்பதில் சர்வதேச சமூகத்தின் தலையீடு இருப்பதாகவும் இந்தக் குழுவினர் குற்றம்சாட்டுகின்றனர். காரணம் இதுபோன்ற 200 அடி உயரம் கொண்ட கோபுரங்களை திடீரென்று எழுப்புவது அத்துணை எளிதல்ல என வாதிடுகின்றனர்.

## அதிரடி மாற்றத்தினைக் கொண்டுவரும் டுவிட்டர்




சமூகவலைத்தளங்கள் வரிசையில் தனக்கென ஒரு இடத்தை டுவிட்டர் பதிவு செய்துள்ளது. பல மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ள இத்தளத்தில் சில வரையறைகள் காணப்படுகின்றன. அதாவது ஒரு டுவீட் செய்யும்போது அதிக பட்சம் 140 எழுத்துக்களையே பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இந்த மட்டுப்படுத்தல் பயனர்களிடையே அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது. அதிலும் @Name என டுவீட் செய்யும்போது @ என்ற குறியீட்டினையும் ஒரு எழுத்தாக கணக்கிடுகின்றது.

ஆனால் புதிய மாற்றத்தின் படி இக்குறை நீக்கப்பட்டுவிடும் என டுவிட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது. இதுதவிர வீடியோக்கள், அனிமேசன் கோப்புக்கள், கருத்துக்கணிப்புக்கள் என்பவற்றிலுள்ள கட்டுப்பாடுகளும் தளர்த்தப் படவுள்ளது. இப்புதிய சேவையினை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட்ஸ் அப், ஃபேஸ்புக்கிற்கு சவாலாக கூகுளின் புதிய அப்ஸ்




இன்று ஒவ்வொரு இளைஞனின் நேரத்தையும் விரல்களையும் ஆண்டு கொண்டிருப்பவை இரண்டே இரண்டு தான். ஒன்று ஃபேஸ்புக் மற்றொன்று வட்ஸ் அப். ஸ்மார்ட் போன்களில் சிம்கார்ட் கூட இல்லாமல் இருக்கும். ஆனால் அந்த இரு அப்களும் இல்லாமல் ஒரு போனைக் கூடப் பார்த்திடமுடியாது. பல காதல்கள் ஃபேஸ்புக்கில் தொடங்கி வட்ஸ் அப் வழியே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவ்விரு அப்களுக்கும் போட்டியாக 'அலோ', 'டுவோ' என இரு அப்களை அறிமுகப்படுத்தியுள்ளது கூகுள் நிறுவனம்.

இன்றைய காலகட்டத்தில் ஃபேஸ்புக்கைக் காட்டிலும் வட்ஸ் அப் தான் அதிகம் பயன்பாட்டிலுள்ளது. போதாக்குறைக்கு மல்டிமீடியாவிலிருந்து பி.டி.எஃப் பைல்கள் வரை அனைத்தையும் அதிலேயே ஷேர் செய்யுமளவிற்கு அப்டேட்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் கூடிய விரைவில் ஜிமெயில் தேவையில்லாமல் போகும் நிலை ஏற்படும் என்று பேசப்பட்டது. அதே சமயம் ஃபேஸ்புக்கின் சிறப்புகளையும் நாம் ஒதுக்கிவிடமுடியாதே. உலகின் ஏதோ ஒரு மூலையில் உள்ளவரோடு நட்பு பாராட்ட உதவும் ஃபேஸ்புக்கில் இன்று சிறுவண்டுகள் கூட லைக்ஸ் தட்டிக்கொண்டிருக்கின்றன. இரண்டே அப்கள் ஃபேஸ்புக், வட்ஸ் அப் என வைத்துக்கொண்டு மொத்த டெக்னோலொஜி உலகையும் ஆண்டுகொண்டிருக்கிறார் சூக்கர் பெர்க். ஒரு காலத்தில் உலகையே வியக்கவைத்துக் கொண்டிருந்த கூகுளால் சும்மா இருக்க முடியுமா? அவர்களும் கூகுள் பிளஸ், ஹேங் அவுட், மெசெஞ்சர் என எத்தனையோ அப்களை அறிமுகப்படுத்தியும் அவ்விரண்டு அப்களையும் ஓவர்டேக் செய்ய முடியவில்லை. எனவே எப்படியேனும் அப் உலகத்தை ஆள வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் இப்போது இந்த இரு புது அப்கள். மெசேஜிங் அப்பான 'அலோ'வில், தற்போது வட்ஸ் அப்பில் அப்டேட் ஆகியிருக்கும் மெசேஜ்களை பாதுகாக்கும் 'என்கிரிப்ஷன்' வசதியோடு, நமக்கு வரும் மெசேஜ்களுக்கு தானாக ரிப்ளை செய்யும் வசதிகளும் உள்ளன.

இதன்மூலம் நாம் ரிப்ளை செய்ய டைப் செய்யவேண்டிய அவசியம் கூட இருக்காதாம். யாரேனும் 'எப்படி இருக்கிறாய்?' என்று கேட்டால், 'நன்றாக இருக்கிறேன்' என்ற பதில் ஒரு ஸ்மைலியோடு ஸ்கிரீனில் சஜெஷனாகக் காட்டும். மிக மோசமான சூழ்நிலையில் கூட துல்லியமான வீடியோ கோலிங் செய்ய உதவுவதே டுவோ அப்பின் மிகப்பெரிய பலம். பிற அப்களைப்போல் கோல் செய்து சில நேரம் கழித்து லோட் ஆகாமல், உடனுக்குடனேயே கோல்கள் இணைக்கப்படுகின்றன. இதனால் வீடியோ கோலிங் அப்களில் டுவோ ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரு அப்களும் அன்டிராய்ட் மற்றும் ஐஓஎஸ் மொபைல் தளங்களில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. வட்ஸ் அப் மற்றும் ஃபேஸ்புக் அளவிற்கு வெற்றி பெரும் அளவிற்குப் பெரிதாக இந்த அப்களில் ஏதுமில்லை என்கிறார்கள் கில்லாடிகள்.

உடற்பயிற்சிக்குப் பின்னர் கொழுப்பு வகை உணவுகளை தவிர்ப்பது நல்லது. மாமிசத்தில் கொழுப்பு அதிகம் இருப்பதால் அதனை நாம் உட்கொள்ளும் போது இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரட்டில் குளூட்டென் மற்றும் சர்க்கரை அதிகம் இருப்பதால் நாம் உடற்பயிற்சி மேற்கொண்ட பின்னர் பிரட்டை சாப்பிடும் போது உடலில் சர்க்கரைச்சத்து வேகமாக ஏற வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சிக்கு பின்னர் நம் உடலில் இரத்த ஓட்டமானது வயிற்றுக்குள் செல்லாமல் வெளியே தான் இருக்கும். எனவே அந்த நேரங்களில் தயிர் வெண்ணெய் போன்ற கொழுப்பு நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ளும் போது செரிமானப் பிரச்சினைகள் ஏற்படும். மேலும் கொழுப்புச்சத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.

# விளையாட்டு உலகம்



## சாதனை படைத்த விராட் கோஹ்லி



இந்திய டெஸ்ட் அணித்தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான விராட் கோஹ்லி, உலகளவில் விற்பனைக்குரிய விளையாட்டு வீரராக (Market able Sports person) சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 'SportsPro' என்ற விளையாட்டு பத்திரிகை நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. அதில் முதலிடத்தை NBA கூடைப்பந்து விளையாட்டு வீரர் ஸ்டீபன் கர்ரி பிடித்துள்ளார். 2வது இடத்தை 'Juventus' French international கால்பந்து கிளப்பை சேர்ந்த வீரர் Paul Pogba பிடித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் இந்திய டெஸ்ட் அணித் தலைவருமான விராட் கோஹ்லி 3ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இந்த பட்டியலில் 'நம்பர் வன்' டென்னிஸ் வீரர் ஜோகோவிச் 23வது இடத்திலும், நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்ஸி 27வது இடத்திலும், உசைன் போல்ட் 31வது இடத்திலும் உள்ளனர். இந்திய பட்டியலில் இடம்பெற்றுள்ள மற்றொரு இந்திய டென்னிஸ் விளையாட்டு வீராங்கனையான சானியா மிர்சா 50வது இடத்தில் உள்ளார். உலகளவில் பிரபலமான ஜோகோவிச், மெஸ்ஸி மற்றும் உசைன் போல்ட் ஆகியோரை முந்தி 3 வது இடத்தை விராட் கோஹ்லி பிடித்துள்ளது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இலங்கையில் சாதனை படைக்க காத்திருக்கும் நாதன் லயன்



அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளரான நாதன் லயன், இலங்கை அணிக்கு எதிரான தொடரில் அசத்த முத்தையா முரளிதரனிடம் பந்துவீச்சு ஆலோசனைகளைப் பெற முடிவு செய்துள்ளார். எதிர்வரும் யூலை மாதம் அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இதில் சிறப்பாக செயற்பட முத்தையா முரளிதரனின் உதவியை நாடியுள்ளார் நாதன் லயன்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்திய துணைக் கண்டத்தில் எப்படி பந்து வீசவேண்டும் என்று முரளி எனக்கு தெரிவித்துள்ளார். அவரிடம் பயிற்சி பெற காத்திருக்கிறேன். அவரிடம் பயிற்சி பெற முடிந்தால் அது களத்தில் சாதிக்க உதவியாக இருக்கும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார். 2011ம் ஆண்டு காலி சர்வதேச மைதானத்தில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான நாதன் லயன் தற்போது வரை 54 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். மேலும், டெஸ்ட் போட்டிகளில் 200 விக்கெட்டுகளை வீழ்த்த அவருக்கு இன்னும் 5 விக்கெட்டுகளே தேவை என்ற நிலையில், இந்த மைல்கல்லை எட்டும் முதல் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீரர் என்ற பெருமையை பெற ஆவலுடன் உள்ளார்.

## சாதனையை சமன் செய்த நியூசிலாந்து வீரர்



இங்கிலாந்தில் நடந்த உள்ளூர் போட்டியில் 19 வயது நியூசிலாந்து வீரர் ஒருவர் ஒரு ஓவரில் 6 சிக்சர்கள் அடித்து சாதனை படைத்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க வீரர் ஹெர்செல்லே கிப்ஸ், இந்திய வீரர் யுவராஜ் சிங் ஆகியோர் மட்டுமே ஒரு ஓவரில் 6 சிக்சர்கள் விளாசி சாதனை படைத்துள்ளனர். இந்நிலையில் இங்கிலாந்தில் மெர்ல்ன்போர்ன் கிரிக்கெட் கிளப்பாக ஆடிய 19 வயதேயான கிளென் பிலிப்ஸ் ஒரு ஓவரில் 6 சிக்சர்கள் விளாசி இவர்கள் சாதனையை சமன் செய்துள்ளார். தொடர்ந்து அசத்திய அவர் Duke of Norfolk XI அணிக்கு எதிரான அந்தப் போட்டியில் 123 பந்தில் 201 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென் ஆபிரிக்காவில்பிறந்துநியூசிலாந்தில் வளர்ந்தவரான ஹெர்செல்லே கிப்ஸ், அண்மையில் வங்கதேசத்தில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண தொடரில் நியூசிலாந்து அணிக்காக விளையாடினார். ஒக்லாந்து அணிக்காக 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடி சதமும் விளாசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜூலையில் சானியாவின் சுயசரிதை

இந்திய விளையாட்டு வீரர்களில் மிகவும் பிரபலமானவர் டென்னிஸ் வீராங்கனை சா-னியா மிர்சா(வயது-29). தற்போது சானியா மிர்சா எழுதியுள்ள அவரின் சுயசரிதை புத்தகம் எதிர்வரும் ஜூலை மாதம் வெளியிட ஹார்பர் கொலின்ஸ் பதிப்பகம் திட்டமிட்டுள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது. அந்தசுயசரிதைக்கு ACE AGAINST ODDS என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயப் மாலிக்கை திருமணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சானியா குறித்த சுயசரிதையில், தான் எவ்வாறு உலகின் நம்பர் வன் டென்னிஸ் வீரராக முன்னேறினார் என்பது குறித்தும், தனது டென்னிஸ் வாழ்க்கையில் சந்தித்த அனுபவங்கள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் நடந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் குறித்தும் பதிவு செய்துள்ளார். இதுபற்றி ஹார்பர் கொலின்ஸ் பதிப்பகத்தின் தலைமை ஆசிரியரான கார்த்திகா கூறுகையில், சானியாவின் சாதனை உண்மையில் மிகப்பெரிய சாதனையாகும். இந்த சுயசரிதை மிகவும் தூண்டுதலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த புத்தகத்தை வெளியிடுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் எனக் கூறியுள்ளார்.



## மீண்டும் இலங்கை அணியில் சுரங்க லக்மல்



இலங்கை அணி இங்கிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்நிலையில் நடைபெறவுள்ள இரண்டாம் டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகிய இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீரவுக்கு பதிலாக சுரங்க லக்மல் இணையவுள்ளார். சமீரவும், தம்மிக்கவும் கடந்த போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டிருந்ததன் காரணமாகவே அவர்கள் இலங்கை அணிக்கு தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் விலகியது இலங்கை அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இதுவரை 26 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 54 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ள சுரங்க லக்மலின் அனுபவம் இங்கிலாந்து அணிக்கு கணிசமான அச்சுறுத்தலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தன்னைத்தானே பார்த்து வியந்து போன நெய்மர்



பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் தன்னுடைய மெழுகுச்சிலையைபார்த்துவியந்துள்ளார். உலகின் பல்வேறு இடங்களில் இருக்கும் மேடம் டுசார்ட்ஸ் அருங்காட்சியகத்தில் பல பிரபலங்களின் மெழுகுச்சிலைகள் உள்ளன. இதில் நெய்மரின் மெழுகுச்சிலையும் இடம்பெறவுள்ளது. அமெரிக்காவில் உள்ள ஓர்லான்டோவில் இது வைக்கப்படவுள்ளது.

இதை ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா அணியின் பயிற்சி மைதானத்தில் பார்வையிட்ட நெய்மர் மெய்சிலிர்த்தார். தன்னைப் போலவே இருக்கும் அந்த சிலையை பார்த்து வியந்துபோன நெய்மர் அதனுடன் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தார். மெழுகுச்சிலையைப்பார்க்க இரட்டை சகோதரர்கள் போல் இருப்பதாக கூறிய நெய்மர், இதை ஓர்லான்டோவிற்கு சென்று அடிக்கடி பார்க்க உள்ளதாகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

## எச்சரிக்கையுடன் தப்பித்தார் வாட்சன்



ராய்ப்பூரில் நடந்த டெல்லி அணிக்கெதிரான போட்டியின் போது பெங்களூர் அணியின் ஓல் ரவுண்டரான வாட்சன் தகாத வார்த்தைகளை அதிக அளவில் பயன்படுத்தியதால் நடுவர் அவரை எச்சரித்து உள்ளார். ஐ.பி.எல் தொடரின் கடைசி லீக் போட்டி ராய்ப்பூரில் நடைபெற்றது. இதில் டெல்லி- பெங்களூர் அணிகள் மோதின. விராட் கோஹ்லியின் அபார ஆட்டத்தால் பெங்களூர் அணி பிளே-ஓப் சுற்றுக்கு தகுதிப்பெற்றது. போட்டியின் போது பெங்களூர் வீரர் வாட்சன் பந்தை டெல்லி அணி வீரர்கள் சிக்ஸ் மற்றும் பவுண்டரி அடிக்கும் போது தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளதாக தெரிகிறது. அதேபோல் பேட்டிங் செய்து அவுட்டாகி செல்லும் போதும் திட்டிக்கொண்டே சென்றுள்ளார். இந்த விவகாரம் மைதான நடுவர் கவனத்திற்குச் சென்றதால், நடுவர் அவரை அழைத்து கண்டித்துள்ளார்.

அதாவது, வாட்சனின் இந்த செய்கை ஐ.பி.எல். நன்னடத்தை விதி 2.1.4ன் கீழ் முதல் நிலை வரம்பிற்குள் வந்ததால் நடுவர் எச்சரித்து அனுப்பியுள்ளார். மும்பை-குஜராத் இடையேயான ஆட்டத்தின் போது போல்லார்ட்-பிராவோ இருவரும் ஐபிஎல் நன்னடத்தை விதியை மீறியதால் இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் ஷரபோவா – சிக்கலில் சிக்கிய கெய்ல்



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மைக் ஹெஸனின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை உள்ள நிலையில் எதிர்வரும் 2019 உலகக்கிண்ணம் வரை அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஹொங்கொங்கில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இந்தப்போட்டியில் ஜோஷ்னா காலிறுதியில் 15-13, 11-6, 6-11, 9-11, 11-4 என்ற செட் கணக்கில் அவுஸ்திரேலியாவின் ரகேல் கிரின்ஹாமை தோற்கடித்தார்.

ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா ஊக்கமருந்து பயன்படுத்தியதால் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இந்நிலையில் ரியோ ஒலிம்பிக் போட்டியில் ரஷ்ய டென்னிஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஐபிஎல் தொடரில் அசத்தி வரும் விராட் கோஹ்லியை முன்னாள் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் பாராட்டியுள்ளார். மனதளவில் அவர் மிகவும் வலுவாக இருப்பதாகவும், அழுத்தமான தருணங்களில் கூட அசத்தி வருகிறார் எனவும் சச்சின் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

ஜிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் டி20 கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள இந்திய அணிக்கு பயிற்சியாளராக சஞ்சய் பாங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் 3வது சுற்றுக்கு முன்னேறினார். இதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 200 வெற்றிகளைப்பெற்ற 8வது வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

இங்கிலாந்து நாளிதழில் பெண் செய்தியாளர் சார்லோட்டே என்பவரிடம் கிறிஸ் கெய்ல் இரட்டை அர்த்தமுடன் ஆபாசமாக பேசினார். இது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இது தொடர்பாக அவர் ஆடி வரும் பெங்களூர் அணி நிர்வாகத்திடம்விளக்கம்கேட்கவுள்ளதாகஐபிஎல் தலைவர் ராஜூவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

# உலகச் செய்திகள்

## அதிகாரபூர்வ வேட்பாளரானார் டொனால்ட் டிரம்ப்



அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக வோஷிங்டன் மாகாணத்தில் நடைபெற்ற உட்கட்சி தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இதன்மூலம் குடியரசுக் கட்சியின் சார்பில் டிரம்ப் போட்டியிடுவது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரும் நவம்பர் மாதம் 8ம் திகதி நடைபெற உள்ளது. இதில், போட்டியிடும் குடியரசுக்கட்சி மற்றும் ஜனநாயகக்கட்சி வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் நடைபெற்று வருகிறது. ஜனநாயகக் கட்சியில் ஹிலாரி கிளிண்டனும், குடியரசுக் கட்சியில் டொனால்ட் டிரம்பும் அதிக வாக்குகளை பெற்று முன்னிலையில் இருந்து வந்தனர். ஜனநாயகக் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராவதற்கு 2,383 பிரதிநிதிகளின் வாக்குகளும், குடியரசுக் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராவதற்கு 1,237 வாக்குகளும் பெற்றிருக்கவேண்டும்.

இந்நிலையில் வோஷிங்டனில் நடந்த உட்கட்சித் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம் 1,238 வாக்குகளை பெற்றுள்ளார் டிரம்ப். அதிகாரபூர்வ ஜனாதிபதி வேட்பாளராவதற்கு தேவைப்படும் 1,237 வாக்குகளைக் கடந்துவிட்டதால் டொனால்ட் டிரம்ப் குடியரசுக் கட்சியின் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராவது உறுதியாகியுள்ளது. அடுத்தபடியாக, கலிபோர்னியா, நியூஜெர்சி, நியூ மெக்சிகோ, மொன்டானா மற்றும் தெற்கு டகோடா ஆகிய மாகாணங்களில் வரும் ஜூன் 7ம் திகதி உட்கட்சித்தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## படைப்பாற்றலில் சிறந்து விளங்கிய ஆதிகால மனிதர்கள்



நியான்டர்தால் மனிதர்கள் முன்பு அறியப்பட்டதைவிட, மிகவும் அறிவார்ந்த மற்றும் படைப்பாற்றல் மிக்கவர்களாக இருந்திருக்கக்கூடும் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது. பிரான்சில் 1990-களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆறு, பாறை கட்டுமானங்கள் 170,000 ஆண்டுகளுக்கு பழமையான காலத்தை சேர்ந்ததாக இருக்கும் என்று தெரிய வந்துள்ளது. அவற்றைக் கட்டியவர்கள் நியான்டர்தால் மனிதர்களாகத்தான் இருக்கும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஏனெனில், நவீனகால மூதாதையர்கள் அந்தக் காலகட்டத்தில் மேற்கு ஐரோப்பாவுக்கு வந்திருக்க வாய்ப்பில்லை என அவர்கள் கூறுகின்றனர். நூற்றுக் கணக்கான உடைந்த கசிதுளிப் படிவுகளால் கட்டப்பட்ட அடிப்படை சுவர்களை கொண்டதாக இந்த கட்டுமானம் உள்ளது.

## தலிபான் இயக்கத்திற்கு புதிய தலைவர் நியமனம்



தலிபான் தீவிரவாத இயக்கத்தின் புதிய தலைவராக முல்லா ஹைபத்துல்லா அகுந்த்ஸாதா நியமிக்கப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தானை தலைமையிடமாகக்கொண்டு செயற்படும் தீவிரவாத அமைப்பான தலிபான் இயக்கத்தின் தலைவராக செயற்பட்டு வந்தவர் முல்லா ஓமர். இவர் கடந்த 2013ம் ஆண்டு இறந்த பின்னர் முல்லா அக்தர் மன்சூர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில் கடந்த 21ம் திகதி நடந்த அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதலில் மன்சூர் கொல்லப்பட்டார். இதனையடுத்து புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான நடந்த அவசர கூட்டத்தில், புதிய தலைவராக முல்லா ஹைபத்துல்லா அகுந்த்ஸாதா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் துணைத் தலைவராகவும், தலிபான் நீதித்துறையின் முன்னாள் தலைவராகவும் பதவி வகித்தவர்.

மேலும் சிராஜுதீன் ஹக்கானி மற்றும் தலிபானின் நிறுவனர் முல்லா ஓமரின் மகனான முகம்மது யாகூப் ஆகியோர் புதிய துணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படை ஊதியம்



சுவிட்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படை ஊதியம் வழங்குவது தொடர்பான புதிய சட்டம் குறித்து அந்நாட்டு பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்துள்ளனர். உலகிலேயே முதல் நாடாக சுவிட்சர்லாந்து தனது குடிமகன்களுக்கு அடிப்படை ஊதியம் வழங்குவது தொடர்பாக புதிய சட்டம் ஒன்றை இயற்ற தீர்மானித்துள்ளது. அதாவது, பணிக்கு செல்லும் அல்லது பணியில் இல்லாத அனைவருக்கும் ஒரு அடிப்படை ஊதியத்தை அரசாங்கமே வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, ஒவ்வொரு இளைஞருக்கும் மாதம் 2,500 பிராங்க் (3,74,900 இலங்கை ரூபாய்) ஊதியம் வழங்குவது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால், சுவிஸ் நாட்டு சட்டப்படி, அரசு புதிய திட்டங்கள் மற்றும் சட்டங்களை சுயமாக அமுல்படுத்த முடியாது. அரசு கொண்டு வரும் சட்டங்களுக்கு பொதுமக்கள் அனுமதி வழங்கினால் மட்டுமே அதனை நடைமுறைப்படுத்தப்படும். எனவே, அரசு கொண்டு வரவுள்ள இந்த புதிய சட்டம் தொடர்பாக பொதுமக்கள் எதிர்வரும் யூன் 5ம் திகதி பொதுவாக்கெடுப்பில் ஈடுபட உள்ளனர். இந்த பொதுவாக்கெடுப்பில் மக்கள் ஆதரவு அளிப்பார்களா? அல்லது எதிர்ப்பார்களா? என்பது குறித்து கருத்துக்கணிப்பு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்த கருத்துக் கணிப்பில் சுமார் 71 சதவிகித மக்கள் இந்தப் புதிய சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேலும், 26 சதவிகித மக்கள் ஆதரவும், 3 சதவிகித மக்கள் 'முடிவு செய்யப்படவில்லை' என்றும் தங்களது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இதேநிலை பொதுமக்கள் மத்தியில் நீடித்து, இந்த சட்டத்திற்கு எதிராக மக்கள் வாக்களித்தால், ஒவ்வொரு குடிமகனுக்கு அடிப்படை ஊதியம் வழங்க அரசு முடிவு செய்துள்ள புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. அதே சமயம், இந்த சட்டத்தை எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கையை விட கணிசமான அளவில் அதிகமாக இருப்பதால், இந்த சட்டம் கொண்டு வருவது சாத்தியமற்றது என சந்தேகங்கள் எழுந்துள்ளது.

## நம்பிக்கையை விதைப்பாரா பிரவுன்



ஒன்டேரியோ கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக பேட்ரிக் பிரவுன் தெரிவு செய்யப்பட்டு ஓராண்டு நிறைவுற உள்ளது. இந்த ஓராண்டில் மட்டும் பிரவுன் ஆயிரக்கணக்கானோரை சந்தித்துள்ளார். தாம் சார்ந்த கட்சியினரை ஊழல் கறை படியாமல் பார்த்துக்கொண்டுள்ளார். இருப்பினும் பிரவுன் மீதான நம்பிக்கை அவரது கட்சியினருக்கு இல்லை. எந்த திட்டங்களும் இல்லாத நபராகவே அவரது கட்சியினர்பிரவுனைபார்த்து வருகின்றனர். 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்சியில் சுமார் 40,000 புது உறுப்பினர்களை சேர்த்து கட்சியின் உயர்மட்டத் தலைவர்களை அதிரவைத்தவர் பிரவுன். கடந்த சில ஆண்டுகளில் கட்சியின் தீவிர போக்கான முடிவுகளில் பிரவுன் தம்மை இணைத்துக்கொண்டது இல்லை. ஆனால் இனி கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுத்து தமது கட்சியை வரவிருக்கும் தேர்தலுக்கு தயார்படுத்த வேண்டும்.

கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி வாய்ப்புகள் குறித்து தனியார் அமைப்பு ஒன்று கடந்த மாதம் ஒரு ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வில் லிபரல் கட்சியினரை விடவும் 5 புள்ளிகள் மட்டுமே முன்னிலையில் உள்ளது கன்சர்வேடிவ் கட்சி. ஏப்ரல் மாதத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் 39 சதவிகிதத்தினர் ஆதரவு தெரிவித்திருந்தனர். லிபரல் கட்சியினருக்கு 34% ஆதரவு இருந்தது தெரிய வந்தது.

இதே அமைப்பு மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் பொதுமக்களிடையே பிரவுனுக்கு இருக்கும் வரவேற்பு என்பது 27 சதவிகிதம் என்ற நிலையில், பிரவுன் மீது கருத்துதெரிவிக்கும்வகையில்தங்களுக்கு அவர் பரிச்சயமானவர் அல்ல என 48 விழுக்காடு கருத்து தெரிவித்திருந்தனர். பார்ரிபகுதியின்பாராளுமன்றஉறுப்பினராக இருந்த காலகட்டங்களில் பிரவுன் மீது நல்ல கருத்து எதுவும் பொதுமக்களுக்கு இருந்ததில்லை. மட்டுமன்றி கொள்கை சார்ந்த முடிவுகள் எடுப்பதில் பிரவுன் எப்போதுமே தடுமாறியது மட்டுமல்ல அது தோல்வியில் முடியுமட்டும் மெத்தனமாக செயற்பட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் எனில் பிரவுன் தம்மை ஒரு முற்போக்கான தலைவராக முன்னிறுத்தவேண்டும். அது மிகவும் கடினமானது என கன்சர்வேடிவ் கட்சியினருக்கு தெரியும் என்றபோதும், அடுத்த ஆண்டு இதே காலகட்டத்தில் கட்சிகள் அனைத்தும் தேர்தல் பிரசாரத்தில் தங்களது முழு கவனத்தையும் செலுத்தும். அதுபோன்ற திட்டத்தை செயற்படுத்தவில்லை எனில் அது முழுத்தோல்வியில் சென்று முடியும் என்பதே நிதர்சனம்.

## தமிழர்களுக்கென உருவாகும் புதிய நிலையம்

பிரித்தானியாவில், வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பெரும்பாலான தமிழர்கள், சொந்த நாட்டு போர் சூழலினால் இடம் பெயர்ந்து வந்து இங்கே குடி புகுந்து தமது வாழ்க்கையை கொண்டு செல்கின்றார்கள் என்பது புதிய விடயமல்ல. தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வந்தவர்கள் காலப்போக்கில் தமது பெற்றோர்களையும் இந்த நாட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள். ஆடிப்பாடி அடிமைப்படாது சுற்றித்திரிந்த முதியவர்களின் வாழ்க்கை, வெளிநாட்டு வாழ்வில் வீட்டுக்குள்ளேயே முடங்கிவிட்டது. தமது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் வேலை மற்றும் பாடசாலை சென்று திரும்பும் வரை வீட்டிலேயே இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

ஐம்பது, அறுபது ஆண்டுகள் இலங்கையிலே வாழ்ந்தவர்கள், லண்டனிலே புதிய மொழி, புதிய இடம், புதிய சமூகம், புதிய கலை கலாச்சாரங்களுக்கு உடனடியாக பொருந்த முடியவில்லை. இந்த பிரச்சினைகளை அறிந்து கொண்ட லண்டன் நகரங்களான Southall மற்றும் Hayesஇல் வாழ்ந்து கொண்டிருந்த பெண்கள் ஒன்று சேர்ந்து 2010ஆம் ஆண்டில் அருணோதயம் தமிழர் சனசமூக மேம்பாட்டு நிலையம் (Sunrise Tamil Community Centre) என்கின்ற நிறுவனத்தை Southall Councillors மற்றும் MPக்களின் துணையோடும் ஏனைய தமிழ் மக்களின் ஆதரவோடும் ஆரம்பித்தனர். வீடுகளில் இருக்கும் முதியவர்கள் அனைவரும் இங்கே ஒன்று சேர்ந்து உரையாடுவதுடன், பலதரப்பட்ட விடயங்களும் இவர்களுக்காக இங்கே உண்டு. யோகா, உடற்பயிற்சி, தையல், புத்தகம் வாசித்தல் போன்றவற்றுடன் ஆங்கில வகுப்புகளும் இவர்களுக்காக இந்த நிறுவனம் இன்று வரைக்கும் வழங்கிக்கொண்டிருக்கிறது. வருடம் தோறும் ஆண்டுவிழாவும், முதியோருக்கான மெய்வல்லுனர் போட்டியும் நடைபெறும். இந்த நிறுவனத்தின் ஸ்தாபகரும், தோற்றுனரும், தலைவருமான திருமதி.ஜெயச்சித்திரா அவர்கள் இந்த நிறுவனத்தின் பெயர் போல் ஒரு உதய சூரியனாக இந்த முதியவர்களுக்கு விளங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதியவர்களுக்கான நிலையமாக ஆரம்பித்து அதன் பின்னர் பெண்களுக்கான செயற்பாடுகளுடன் பெண்களுக்கான நிலையத்தையும், சிறுவர்களுக்கு தமிழ் மற்றும் கலை வளர்க்கும் பாடசாலையாகவும் இன்று விஸ்தரித்து இருக்கிறது. அருணோதயம் தமிழர் சனசமூக மேம்பாட்டு நிலையம், தமிழர்களுடைய பாராட்டுக்களைப் பெற்றது மட்டுமல்லாது, உள்ளூர் Councillorsகள் மற்றும் MPக்களுடைய வாழ்த்துக்களையும் பெற்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் தொழிலதிபர் Atul Pathak அவர்களால் சிறந்த சமூக வேலைக்கான பரிசையும் பெற்றிருக்கிறது. ஆறாவது ஆண்டு நிறைவையும், தலைவர் திருமதி.சித்திராவினுடைய பிறந்தநாளையும் இந்த Sunrise Tamil Community Centreல் கொண்டாடியுள்ளார்கள். வெவ்வேறு இடங்களில் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் முதியோர் இல்லம், பெண்கள் நிலையம் மற்றும் தமிழ் பாடசாலை ஞாயிறு 5ஆம் திகதி ஜூன் மாதத்தில் இருந்து அருணோதய நிலையத்தின் சொந்த இடத்தில் ஒன்றாக நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய இடமானது, Southall Ealing MP திரு.Virendra Sharma அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# விந்தை உலகம்

## தெருக்களே இல்லாத கிராமம் – சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்

நெதர்லாந்தில் அமைந்துள்ள ஒரு கிராமமானது மொத்தமும் தண்ணீரால் சூழப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றது. சாலைகளோ கரும்புகை கக்கும் வாகனங்களோ ஏதுமற்ற அந்த நீர் சூழ் கிராமத்தில் ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் அங்கு அமைக்கப்பட்டுள்ள பாலங்கள் அல்லது படகையே பயன்படுத்தவேண்டும். ஒட்டுமொத்தமாக 2,600 குடிமக்களே வாழும் அந்த இயற்கை எழில் கொஞ்சும் கிராமத்தில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகளும் குட்டித்தீவுகளாகவே காட்சி தருகின்றன. குளிர்காலத்தில் பனிச்சறுக்கு விளையாட ஏதுவானதாக இருக்கும். இப்பகுதிக்கு வருகைதரும் அனைத்து பயணிகளையும் அவர்களது வாகனங்களை கிராமத்தின் வெளியே நிறுத்தவேண்டும். அங்கிருந்து படகு மூலமே இப்பகுதிக்கு வரமுடியும். அதிக சத்தமற்ற படகு சவாரி, அதன்பின்னர் கால்நடையாக சில அடி தூரம் நடந்து வந்தாலே நெதர்லாந்தின் வெனிஸ் வந்துவிடும்.



## மிகச்சிறிய நீளக்காற்சட்டையை வடிவமைத்துச் சாதனை



துருக்கியைச்சேர்ந்த தையற்கலைஞர் காசிம் அண்டக்(34) உலகிலேயே மிகச்சிறிய நீளக்காற்சட்டையை வடிவமைத்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். பரம்பரையாக தையற்தொழிலைச் செய்துவரும் காசிம் இதுபற்றித் தெரிவித்திருப்பதாவது, நான் இந்தத் தொழிலுக்கு வந்தபோது மிகவும் அலுப்பாக இருந்தது. ஒரே மாதிரி வேலையைச் செய்கிறோம் என்ற எண்ணம் வந்துகொண்டே இருந்தது.

என்னால் வேறு தொழிலையும் செய்ய முடியாத சூழல். இந்தத் தொழிலை இன்னும் சுவாரஷ்யமாக மாற்றிக்கொள்வது எப்படி என்று யோசித்தேன். புதுப்புது யோசனைகள் உதித்தன. அவற்றைச்செய்து பார்த்தபோது, ஏராளமான வரவேற்புக் கிடைத்தது. என் அப்பா ஒரு குழந்தைக்கு சிறிய நீளக்காற்சட்டையை தைத்துக்கொடுத்தார். அதைப் பார்த்துதான் மிகச் சிறியதை உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் வந்தது. 7.5 செ.மீ. ஜீன்ஸை உருவாக்கிப் பார்த்தேன். வெற்றிகரமாகத் தைத்து முடித்த பிறகு, 5 செ.மீ. ஜீன்ஸைத் தைக்க ஆரம்பித்தேன். அளவு சிறியதாகப் போகும்போது தைப்பதும் கடினமாகிக்கொண்டே வரும். 2.5 செ.மீ. ஜீன்ஸ் தைத்து முடித்தவுடன், அதைவிடச் சிறியதைத் தைக்க முடியுமா? என்று என் அப்பா சவால் விட்டார். அந்த சவாலில் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்பதற்காக 0.9 செ.மீ. ஜீன்ஸையும் தைத்து முடித்து கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்துவிட்டேன்.

## நீச்சல் குளம், மாடிப் படிக்கட்டை 3Dயில் உருவாக்கி அசத்தும் கலைஞர்












# மரண அறிவித்தல்



மண்டைதீவு அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸில் வசித்தவரும், வட்டக்கச்சி மாயவனூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவஞானம் அவர்கள் 25-05-2016 புதன்கிழமை அன்று வட்டக்கச்சியில் காலமானார்.

அன்னார், மண்டைதீவு அல்லைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், செந்தில்நாயகி(பிரான்ஸ்), சிறிதரன்(இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்), சிறிகுகன்(சுவிஸ்), காலஞ்சென்ற சிறிபரன், காலஞ்சென்ற சிறிவரதன், நவநிதி(பிரான்ஸ்), சிறிரங்கன்(பிரான்ஸ்), சிவநிதி(இலங்கை), சிறிரூபன், சிறிஅன்பன்(கனடா), சிறிவினோதன்(பிரான்ஸ்), கலைநிதி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயபாபு, சிவஞானகுமாரி(ஆசிரியை- கிளி வட்டக்கச்சி மத்திய கல்லூரி), பத்மலோசனி(சுவிஸ்), கேதீஸ்வரன்(பிரான்ஸ்-முன்னாள் கிராம அலுவலர்), அருட்செல்வி(பிரான்ஸ்), வேலவன்(வன்னி மலர்காடு- முன்னாள் உப தபாலதிபர்), சத்தியசிவம்(பிரான்ஸ்- முன்னாள் அலுவலக உதவியாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்), தர்சினி(கனடா), கோசலாதேவி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்- யாழ்.மாவட்ட செயலகம்), அன்னலட்சுமி இராசையா(அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, இராசலட்சுமி நல்லையா(மண்டைதீவு), நித்தியலட்சுமி, பாலசிங்கம்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கம்மா(ஓய்வுநிலை அதிபர் வட்டக்கச்சி தெற்கு வித்தியாலயம்-லண்டன்), காலஞ்சென்றவர்களான பேரம்பலம், பசுபதி, கனகமலர் மற்றும் பொன்னுத்துரை, தர்மலிங்கம், லோகநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

மண்ணில் 1938-03-11 விண்ணில் 2016-05-25

மண்டைதீவு அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்,
வட்டக்கச்சி மாயவனூரை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## சின்னத்துரை சிவஞானம்

**அன்னாரின் இறுதிக்கிரியை 29-05-2016 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று பின்னர் மம்மில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.**

வீட்டு முகவரி:-
இல. 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

இவ் அறிவித்தலை உற்றார்,
உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 29.05.2016 அன்று வெளியிடப்பட்டது.